REGD. M

# திராவிடநாடு

விலை அணா 2   ஆண்டுசந்தா ரூ 7   இலங்கை 15 சதம்   மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 17—4—49 | இதழ் 42

# ★ வெள்ளி ரதம் ★

## கைலாயத்தில் ஓர் உரையாடல்

— கீரதர் —

உமாதேவியார்:— பிராணபதே! என்ன இது! வாட்டமுற்றவர் போலக் காணப்படுகிறீரே! மலர்ந்த முகத்துடன், பெருமிதத்துடன், வெற்றிக்களையுடன், காட்சி அளிக்க வேண்டிய சமயத்தில், சோகமுற்ற கோலம் கொள்வானேன்?

ஏகாம்பரேஸ்வரர்:— பார்வதி! பேசாமல் போய்ப்படு. பிராணனை வாங்காதே. போதும் எனக்குள்ள வேதனை!

உமா:— இதென்ன விந்தை! என்னையத் தினம் நாம் பரம திருப்தியுடன், பூரிப்புடன், இருக்கவேண்டுமோ, அந்நாளாகப் பார்த்தா, இந்தக் கோபமும் சோகமும் கொள்வது? என்மனம் துள்ளிவிளையாடுகிறது! பாமாலையின் விசேஷத்தைப் புகழ்வதா? பூமாலையின்மணத்தினைப் புகழ்வதா? பக்தகோடிகளின் தோத்திரத்தை எண்ணிப் புகழ்வதா? இரவைப் பகலாக்கும் விதமான அலங்கார விளக்கொளியின் விசேஷத்தைப் புகழ்வதா? எதை விடுவது, எதை மறக்கமுடியும்! அவ்வளவு அபூர்வமான அகமகிழ்ச்சியைப் பெற்ற நாம், அருள் பொழிய வேண்டியது முறையாயிருக்க, நீர், அழுதுவிடுவீர் போலிருக்கிறதே! காரணம் என்ன இந்தக் கலக்கத்துக்கு! ஒருவேளை, அலுப்போ, பிராணபதே!

ஏகாம்:— என் கலக்கத்துக்குக் காரணம் தெரியாமல் திகைக்கிறாய், தேவீ! நானோ, உன் மனம் என்னமோ, துள்ளி விளையாடுகிறது என்று கூறினாயே, அந்தக்களிப்புக்கு என்ன காரணம் என்று அறியாமல், திகைக்கிறேன். பேதைப் பெண்ணே! சிந்தித்தால் சித்தம் குழம்பும் சம்பவம் நடந்திருக்க, நீ, சிறுகுழந்தை போல, ஆடிப்பாடி அகமகிழ்கிறாய். பைய பைய, ஹிமவான் மகளே! நீ, சிந்தனைத் திறத்தையே இழந்துகொண்டு வருகிறாய். நாம், இழிவு செய்யப்படுகிறோம், கேலிக்கு ஆளாக்கப்படுகிறோம், வீணரின் விளையாட்டுக் கருவிகளாக்கப்பட்டிருக்கிறோம், இந்த விபரீதத்தைப் பற்றித் துளியாவது, எண்ணிப்பார்த்தால், விசாரத்தில் ஆழ்ந்து போவாய்.

உமா:— நாதா! என்ன வார்த்தை பேசுகிறீர்கள். பொருள் விளங்கவில்லையே! பித்தா என்று பக்தர்கள் உம்மை அழைப்பது, நிந்தாஸ்துதி என்பீர்களே, அல்ல, அல்ல, நிஜமான வார்த்தையே அது. சித்தம் தடுமாறிப் பிதற்றுகிறீரே! நம்மையா, கேலி செய்தார்கள்! நம்மையா இழிவு செய்தனர்! யார் அத்தகைய 'சண்டாளர்கள்'? நேற்று நமக்கு நடைபெற்ற ராஜோபசாரத்தைக்காணாத கயவர்களா அவர்கள்! இலட்சோபிலட்சம் மக்கள் புடைசூழ, நவரத்னங்கள் விண்ணிலிருந்து பொழிவது போல, வாணவேடிக்கையும், நந்தியின் முகம் வெட்கத்தால் சிவந்துவிடச் செய்யும் அளவுக்கு, வெடி வேட்டும், உடனிருக்க, பக்தகோடிகள், வாழ்த்த, அழகிய, அலங்கார மிக்க, வெள்ளிரதத்திலே, நாம் வீற்றிருந்து, வீதிவலம் வந்த காட்சி இன்னமும், அடியாரின் மனக்கண்ணில் தோன்றிய வண்ணம் இருக்கிறதே! முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் காஞ்சியம்பதியிலே, பல இலட்ச ரூபாய் செலவிலே, நமக்காக வெள்ளிரதம் செய்து, விழாக் கொண்டாடினரே, பக்தர்கள், இரவு பகலாகிவிட்டதே, ஊர் இந்திரலோகம் போலக் காட்சி கொண்டதே, எங்கும் எவரும், வெள்ளிரத உற்சவத்தின் விசேஷத்தைப் பற்றித்தானே வியந்து பேசினர்! அவ்விதம், நம்மைப் பக்தர்கள், பெருமைப்படுத்திக் கொண்டாடி, தோத்தரித்திருக்க, நீர், ஏன் விசாரப்படவேண்டும்? நாத்திகப் புயல் அடிக்கிறதோ என்று நாம் எண்ணிக்கொண்டிருந்தோம் ஏக்கத்துடன்! பூஜா உணர்ச்சி புகைந்து போய்விட்டதோ என்று சந்தேகப்பட்டோம். காஞ்சி க்ஷேத்ரவாசிகள் நமது சந்தேகத்தைப் போக்கி, அழகான வெள்ளிரதத்தைக் காணிக்கையாக்கினரே, நமக்கு...

ஏகா:— பார்வதி! உன் பூரிப்புக்கு எது காரணமாக இருக்கிறதோ, அதுவே, என் விசாரத்துக்குக் காரணமாக இருக்கிறது. எந்த வெள்ளித் தேர் வைபவத்தைக் கண்டு உன் மனம் துள்ளி விளையாடுகிறதோ, அதே வைபவந்தான் எனக்கு வாட்டத்தைக் கொடுத்திருக்கிறது.

உமா:— விளங்கவில்லையே, நாதா!

ஏகா:— விளங்காது உனக்கு; நான் விளக்கினலொழிய! பார்வதி! வெள்ளிரத உற்சவம் கொண்டாடினர்களே, அது நமக்குப் பெருமை என்று எண்ணிக்கொண்டாய்?

உமா:— இல்லையா, நாதா! அத்தனை இலட்சம் செலவு செய்தது, நம்மைப் பெருமைப்படுத்துவது என்று தானே பொருள்!

ஏகா:— இங்குதான், நான் சிந்திக்கிறேன்—சித்தம் சோர்கிறேன்—நீ சிந்திக்காமலிருக்கிறாய், ஆகவே மகிழ்ச்சி பெறுகிறாய்! சிந்தனை வேண்டும் சிவகாமி! நாமாவது சிந்திக்காவிட்டால், பிரபஞ்சம் என்ன கதியாவது! இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வந்தார்களல்லவா...?

உமா:— ஆமாம்—பல்வேறு ஊர்களிலிருந்து — மோட்டாரிலும் ரயிலிலும்......

ஏகா:— ஊரே திரண்டு விட்டதல்லவா?

உமா:— ஆமாம்-ஆடவரும் பெண்டிரும்—குழந்தைகளும் வயோதிகரும்—பாமரரும் படித்தவர்களும், பட்டிக்காடுகளும் பட்டண வாசிகளும், சகலரும் திரண்டுவந்தனர்.....

ஏகா:— வந்தனரல்லவா......!

உமா:— வந்தனர் — வந்தனர்—பன்னிப்பன்னிக் கேட்கிறீரே இதனை .........

ஏகா:— காரணமின்றி அல்ல நான் கேட்பது. இலட்சத்துக்கு மேற்பட்டமக்கள் வந்தனர்—எதற்கு....?

உமா - விளையாடுகிறீரா! எதற்கு! இது ஒரு கேள்வியா? எதற்கு வந்தனர் என்றால், வெள்ளித்தேர் பார்க்க!

ஏகா: இன்னொரு முறை கூறு! கோபியாமல் சொல், கோமளமே எதற்கு வந்தனர் அவ்வளவு மக்களும்.........?

உமா:— வெள்ளித்தேர் பார்க்க!

ஏகா:— சரியாகச் சொன்னாய் பார்வதி! உண்மையை உரைத்தாய்! வெள்ளித்தேர் பார்க்க வந்தனர், லட்சக்கணக்கான மக்கள்—உன்னையும் என்னையும் பார்க்க அல்ல—நம்மைத் தரிசிக்க அல்ல-நமக்குப் பூஜை செய்ய வரவில்லை-நமக்குப் பெருமை தர வரவில்லை—வெள்ளித்தேர்பார்க்கவே வந்தனர்! பார்வதி! வெட்கமும் துக்கமுமின்றிக் கூறுகிறாயே, வெள்ளித்தேர் பார்க்கவந்தனர் என்று! நம்மைப் பார்க்கவரவில்லை!! இலட்சக் கணக்கான மக்களைப் பக்தகோடிகளை, நீ விவரித்தபடி, பலரகமான மக்களை, திரட்டிக் கொண்டு வரும் மகிமை, சக்தி, நமக்கு இல்லை! கேவலம், வெள்ளித்தேர் கொண்டுவந்து சேர்த்தது இவ்வளவு பெருந்திரளான மக்களை! கைலைவாசி, திரிபுராந்தகன், கபாலி, பிறை சூடி, என்றெல்லாம் எனக்குச் சிறப்புப் பெயர்கள் பல உள! தோடுடைய செவியன்! தூவெண்மதி சூடி! காடுடைய சுடலைப்பொடி பூசி! என்றெல்லாம் கவிதா வடிவிலே, பல பட்டங்கள் உள்ளன எனக்கு. உனக்கும், உயர்வளிக்கும் பட்டங்கள் பல! எனினும், பிராணநாயகி! நமது பெருமை, மகிமை, போது மானதாக இல்லை, அவ்வளவு பக்தகோடிகளைத் திரட்டிக் கொண்டுவர! நம்மைப் பற்றி, நால்வர் பாடியுள்ள பாசுரங்கள், புராணிகர்கள் இழைத்துள்ள கதைகள், போதுமானவைகளாக இல்லை, பக்த கோடிகளைக் கூட்டிவர! வெள்ளித்தேர், தேவைப்படுகிறது! வேதனையாக இல்லையா! வேலவன் தாயே! நீயே, கூறினாய், மக்கள் எதற்காகக் கூடினர், என்பதை! வெள்ளித்தேர் பார்க்கவந்தனர்—நம்மைத் தரிசிக்க அல்ல!

உமா:— நாதா! எனக்கும் இப்போதுதான் ஓரளவுக்கு விளங்குகிறது.........

ஏகா:— உமா! நீயும், அன்று மக்களைப் போலவே, பொழுது போக்கி விட்டாய் — கொட்டு முழக்கு கேட்டு மெய்மறந்து போனாய்—வாணவேடிக்கையைக்கண்டு வாய் பிளந்து நின்றாய்—சிந்திக்கவில்லை—பக்த கோடிகள் பேசிக்கொண்டதையும், கேட்கவில்லை. கேட்டிருந்தால், நான் அடக்கிக்கொண்டதைப் போல, உன்னால் ஆத்திரத்தையும் அழுகையையும் அடக்கிக்கொண்டிருந்திருக்க முடியாது.

உமா:— என்ன பேசினார்கள் பிராணபதே!

ஏகா:— என்ன பேசினார்களா! எல்லாம் பேசினார்கள் — நம்மைப்பற்றி மட்டுந்தான், ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்தபோதெல்லாம், அந்த ஜனங்கள், வெள்ளித்தேர் எந்தத் தெருவில் இருக்கிறது—இந்த வீதிக்கு வெள்ளித்தேர் வர, எவ்வளவு நேரம் பிடிக்கும்—வெள்ளித்தேர், எத்தனைமணிக்குக் கிளம்பிற்று—எத்தனை மணிக்குக் கோயில் போய்ச் சேரும்—என்று, வெள்ளித்தேர், வெவள்ளித்தேர் என்று ஓயாமல் பேசினரே யொழிய, நம்மைப் பற்றிச் சிந்திக்கவேஇல்லை. வெள்ளித்தேருக்குத்தான், சகல மரியாதையும்! சகலருடைய பார்வையும் வெள்ளித் தேரின் மீதுதான்—இறைவன் வீற்றிருக்கிறானே தேவியுடன், என்று எண்ணினரோ? இல்லை! இறைவனைப் பற்றி அறவே மறந்தனர். வெள்ளித்தேர், எவ்வளவு செலவு செய்து கட்டினார்கள்? எவ்வளவு வசூலாயிற்று! யார் வசூலித்தார்கள்? எங்கெங்கு சென்று வசூலித்தனர்? என்று கேள்விச் சரங்கள் பூட்டுவோரும், "சொல்லுகிறார்கள் நாலு இலட்சம் என்று—யார் கண்டார்கள்—" என்று ஒரு சந்தேகப்பேர்வழி கூற, சளைக்காத சைவ மெய்யன்பர், சரியான கணக்கு—சத்யமான கணக்கு என்று வாதாட, சமரசப் பிரியர், செலவு கிடக்கட்டும், கணக்குச் சரியா தவறு என்பது கூடக் கிடக்கட்டும், வேலைப்பாடு நேர்த்தியாக இருக்கிறது என்று பேச—இப்படி, பேச்செல்லாம் வெள்ளித் தேர் பற்றியதாக இருந்ததே யொழிய, நமது மகிமையைப் பற்றி ஏதும் பேசவே இல்லை. உமா! வெள்ளித் தேர், நம்மை மறைத்தேவிட்டது! வெள்ளித்தேர் உற்சவ வைபவத்தில், மக்கள் இலயித்துப்போய், நம்மைத் தொழவும் மறந்து போயினர். ஆஹா! தேரின் அழகைப் பார், பள பளப்பைப் பார், அலங்காரத்தைப் பார், என்று இப்படித், தேரைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனரே யன்றி, உன் அருளொழுகும் கண்களைப் பற்றியோ, என் ஜடாமுடி பற்றியோ, கையிலுள்ள மழு, சிரத்திலுள்ள கங்கா, மார்பில் புரளும் நாகமாலை, எனும் இவைபற்றிப் பேசுவாரே காணோம்! வேதனை பிறவாமல் இருக்குமா!

உமா:— உண்மைதான், நாதா! தாங்கள் கூறியது கேட்டு, நானும் உள்ளம் வாடுகிறேன்.

ஏகா:— தேடித் தேடிப் பார்த்தேன், நம்மை நாடி வந்தவர் ஒரு பத்துப் பேராவது கிடைக்கமாட்டார்களா, என்று. நீறு பூசிகள் கூட

வேறு சிந்தனையி லீடுபட்டு, என்னை மறந்து போயினர்.

உமா:— மன்னிக்க வேண்டும், நான், இவ்வளவு ஆழ்ந்த சிந்தனையைச் செலுத்தவில்லை.

ஏகா:— பார், பார்வதி! ஒரு வேடிக்கையை. பக்த கோடிகள், நம்மைப் பற்றிப் பேச மறந்து, அந்தத் தேரைப் பற்றிப் பெருமை பல பேசியதுடன், அதை முன்னின்று அமைத்தவரின் குணம், பணம், ஆகியவை பற்றியும் பேசினர்! பக்தி என்ற பதத்துக்குரிய இலட்சணத்தைத் துளியும் அன்று நான் காணவில்லை.

உமா:— இருந்தாலும், இறைவன் பொருட்டு இவ்வளவு சிரத்தை காட்டினார்களே, என்பதை எண்ணும்போது. மகிழ்ச்சி பிறக்கவில்லையா?

ஏகா:— இதென்ன கேள்வி பார்வதி! நம்மைத் தரிசித்து அருள் பெற, தோத்தரித்து முக்தி கோர, மிக மிகச் சிறு கூட்டமே வரக் காண்கிறோம் வழக்கமாக! ஒவ்வொரு நாளும் ஆலயம் வருகிறவர்களின் தொகையை நீ அறியாயா? அவ்வளவு பேரும், தூய்மையான நோக்கத்துடனே வருபவர்கள் அல்ல! அதுவும் உனக்குத் தெரியும். நமது தரிசனத்துக்கு மிகச் சிறு கூட்டம்—ஆனல் வெள்ளித் தேர்—தங்க ரிஷபம்—பொன் பல்லக்கு—என்று இப்படி ஏதாவது காட்சி காட்டினல், ஊர் திரண்டு விடுகிறது. இதன் பொருள் என்ன? உண்மையாகக் கூறுகிறேன் உமா! அன்று அவ்வளவு பெருங்கூட்டத்தைப் பார்க்கும்போது, எனக்குக் கோபந்தான்! இறைவனின் பெருமையை உணராத மக்களே! நித்தமும் நான் வீற்றிருக்கும் கோயிலுக்கு, இவ்வளவு 'அக்கரையுடன்', நீங்கள் வருவதில்லையே! இன்று மட்டும் குவிந்து விட்டீர்களே! என்னைவிட, உங்களுக்கு, வெள்ளித் தேர் மீது அமோகமான ஆசை என்று தெரிகிறதே! என்னிடம் உள்ளன்பு இருக்குமானல், உண்மையான பக்திமான்களாக நீங்கள் இருந்தால், இன்று வருவது போலத் தானே, ஒவ்வோர் நாளும்—உள்ளூர்க்காரர் வரையிலாவது — பெருவாரியாக வரவேண்டும்? வருவது கிடையாதே! இன்று வந்துவிட்டீர்களே!! — என்று அந்த மக்களைப் பார்த்துக் கேட்கலாமா என்றுகூட எண்ணம் பிறந்தது.

உமா:— கேட்டிருக்கலாம்......

ஏகா:— கேட்டிருந்தால் கூட அந்த ஜனங்களின் செவியில் விழுந்திருக்காது. அவர்கள்தான், அவ்வளவு, ஆனந்த அமளியில் ஈடுபட்டுக் கிடந்தனரே! ஆறுமுகத்தைப் பார், அருணாசலத்தைக் கூப்பிடு, புவனா மாதிரி இருக்கிறது, பொன்னியின் தங்கை போகிறாள் — பாண்டியாக் மோட்டார், பர்மாஷெல் கம்பெனி, சரிகை கலந்த வெண்பட்டு, சர். தேசிகாச்சாரி வீட்டு மனஷாள், S. O. C. கம்பெனி, இன்கம்டாக்ஸ் ஆபிசர், என்று இம்படித்தான், பல விஷயங்களைப் பற்றி இரைச்சலிட்டுக்கொண்டிருந்தார்களே தவிர, என்னைப்பற்றியோ, உன்னைப்பற்றியோ ஒருசொல்லும்சொல்லக்காணேமே! வெள்ளித்தேராம், வெள்ளித்தேர்! வேதனையைத் தந்தது! நமது பெருமையையே குறைத்துவிட்டது. உண்மையாகச் சொல்கிறேன் உமா! இதே வெள்ளித்தேரில், விநாயகரோ விஷ்ணுவோ, நாரதரோ, நந்தியோ, பூதகணமோ, சித்ராபுத்ரனே, ஊர்வசியோ, எவனவது தவசியோ, ஏசுவோ, புத்தரோ, எந்தமூர்த்தியை அமர்த்தியிருந்தாலும், இதேகூட்டம் கூடிவிட்டிருக்கும்! கூட்டம், தேருக்கு — தேவனுக்கு அல்ல! இதை அறிந்தபோதுதான் நான் ஆத்திரமடைந்தேன். மேலும், உமா! நீயே சொல்லு, நமது பெருமையும் மகிமையும் என்னகாரணத்தினலோ, ஜனங்களை வசீகரிக்கவில்லை என்பதற்காகத்தானே, இப்படி வெள்ளித்தேர் போன்ற வைபவங்களை ஏற்பாடு செய்கிறார்கள்! இது நமக்குப் பெருமை தருவதா! நம்மைக்கேலி செய்வதல்லவா இது? பார்த்தாயா பாமினே! பக்தர்கள், அத்தி பூத்ததுபோலாகிவிட்டனரே, ஆலயம் வருவோரின் தொகையே குறைந்துவிட்டதே என்று கூறினீரே, இதோபாரும் கும்பல் சேர்க்கும் வித்தையை, ஒரு தேர் செய்தோம் வெள்ளியில், இலட்சம் மக்களைக்கொண்டுவந்தோம் உம் எதிரில்! எப்படி எங்கள் சமர்த்து! — என்று நம்மிடம் கூறி, முன்வரிசைக்காரர்கள் நம்மைக்கேலிசெய்வதுபோலவே தோன்றிற்று. பத்தே பத்துபேர் வந்தாலும் போதும் பக்தியுடன், நம்மைத்தரிசிக்க! அதுதான் நமக்குப் பெருமை — பூரிப்பு! இப்படி ஊரே திரண்டுவந்து என்னபயன்? வெள்ளித்தேருக்குத்தானே, பெருமை! நமக்கா? தேராகச் செய்த அவ்வளவு வெள்ளியையும், தேன் உருச் செய்து தெருவில் கொண்டுவந்தால் கூடத்தான் பெருங்கூட்டம் கூடிவிடும். நமக்குப்பதில், வேறு தேவன் இருந்தாலும், மக்கள், வித்யாசம் பாராட்டப்போவதில்லை. ஆகவேதான் எனக்கு ஆத்திரமாகிவிட்டது.

உமா:- இவ்வளவு விளக்கமாகச் சொன்னபிறகுதான், எனக்கும் வெட்கமும் துக்கமும் பிறக்கிறது. நம்மைப் பெருமைப்படுத்தவே இல்லை அந்த நடிப்புப் பக்தர்கள்.

ஏகா:- விழாநடத்தியவர்கள், நம்மை, எவ்வளவு கேலிக்குரிய நிலையில் கொண்டுவந்து வைத்தனர்தெரியுமோ? ஊருருக்கும், விளம்பரத்தாள் அனுப்பி வைத்தனர், விசேஷத்தைத் தெரிவிக்க — கூட்டம் சேர்க்க! அதிலே, பூசணிக்காய் அளவிலே, வெள்ளிரத உற்சவம் என்ற வாசகம்—உருத்திராட்ச அளவுகூட இராது, நமதுபெயர்! என்னபொருள் இதற்கு? ஏகாம்பரேஸ்வரரைக்காண வாருங்கள்! ஈசனின் அருளை நாடுங்கள்! பக்தி செலுத்துங்கள்!—என்று கூறினல் கூட்டம் வராது, வெள்ளிரதம் பார்க்க வாருங்கள் என்று கூப்பிட்டால்தான், கும்பல் சேரும், என்று தீர்மானித்துவிட்டனர். நம்மைப் பெருமைப்படுத்துவதா, அந்தத் திருக்கூட்டத்தின் நோக்கம்?

உமா:- நிச்சயமாக இல்லை-நம்மை நையாண்டியே செய்தனர் நாதா!

ஏகா:- யார் கேட்டார்கள் இவர்களை வெள்ளித்தேர் வேண்டுமென்று!

உமா:- மிதமிஞ்சிய பணம்!

ஏகா:- அதுவும் இல்லையே! அதே ஊரில், மூன்று ஆண்டுகளாக, ஒரு "காலேஜ்" கட்டுவதற்கு, இந்தக்கன தனவான்களால் முடியவில்லை — முகாரிபாடினர்கள் — கூடிக் கூடிப் பேசினர்கள், பெட்டியைத்திறக்கவே இல்லை — இதற்குமட்டும் கொட்டிக் கொடுத்தனர். ஒரு வாசகசாலை உண்டா அந்த ஊரில்! ஒரு விளையாட்டு மைதானம் உண்டா! ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு பராமரிப்புச் சாலை உண்டா! ஒரு நகரப் பொது மண்டபம் உண்டா? நல்ல ரோடு உண்டா? சாக்கடைநாற்றம் போன

துண்டா! எதுவும் இல்லை! எதைச் செய்யவும் பணம் கிடைப்பதில்லை. இதற்குமட்டும் கிடைத்தது இலட்சக்கணக்கில். இந்தத்தேர், நம்மை மறைத்து நமது மகிமையைக் குறைத்து உண்மைப் பக்தியைச் சிதைத்தது. வெறும் பொழுது போக்குக்கு, வீண் களியாட்டத்துக்கு, பலவகையான நடமாட்டத்துக்கு, வம்பளப்புக்குப் பயன்பட்ட இந்தத்தேர், பல இலட்சரூபாய்களை விழுங்கிவிட்டு, பயன் என்ன தருகிறது! வருஷத்தில் ஒரு நாள்! இதற்கு இவ்வளவு பணம் விரயமாவதா? இந்தத் தொகையைக்கொண்டு, உமா நெசவுத் தொழிற்சாலையோ, சிவா சாயத் தொழிற்சாலையோ, ஏகாம்பரர் காலேஜோ, அமைத்திருந்தால், ஒவ்வொரு நாளும் பயன்தருமே – ஏழை எளியவர் பிழைப்பரே, அறிவுக்கதிர் பரவுமே செய்தனரா?

உமா:- செய்யவில்லையே!

ஏகா:- வேலையில்லாமல் வேதனைப் படுபவர்கள், படிக்கவழியின்றி வாட்டமடைகிறவர்கள், தங்க இடமின்றி திண்டாடுகிறவர்கள், அதே ஊரில், வருஷத்திற்கு ஒருதினம் நாம் சவாரி செய்வதற்காக, இவ்வளவு பெருஞ் செலவில் வெள்ளித் தேர் அமைத்திருப்பதை எண்ணிடும் போது, உமா! அவர்கள் மனம் என்ன பாடுபடும்! என்னென்ன பேசுவர்! இவ்வளவுக்கும் இடம் வைத்து, நம்மை இடர்ப்படச் செய்கிறார்கள், பக்தி என்ற தத்துவத்தையே புரிந்து கொள்ளும் பண்பும் அற்ற, பணந்தேடிகள்!!

உமா:- விசித்திர சித்தர்களாக உள்ளனரே நாதா! இவர்கள். ஒரு இலட்சரூபாய் திரட்டி, காலேஜ் அமைக்க முன்வராத, முன்வரிசைச் சீமான்கள், பல இலட்சத்தை வெள்ளித்தேர் ஆக்க மட்டும், ஏன் சம்மதித்தார்கள்......

ஏகா:- ஏன்! என்னை ஏய்க்கலாம் என்ற எண்ணம். கல்லூரி அமைத்தால், பலர் படித்துவிடுவார்களே! படித்தால், அவர்கள் நிலை உயருமே! அதை எப்படிக் கண்டு சகிக்க முடியும் அவர்களால்! வெடியாகவும் ரதமாகவும் பணம் பாழானால், பரவாயில்லை, என்று எண்ணுகிறார்கள். பிறரை வாழவைக்கவோ, நிலையை உயர்த்தவோ, அறிவைப் பரப்பவோ முன்வரமாட்டார்கள் — அச்சம் — அருளை — அவநம்பிக்கை — மக்களின் வறுமைப்பிணி குறைந்து விட்டால், அறியாமை நீங்கிவிட்டால் பிறகு, தங்களுடன் சமமாகி விடுவரே என்ற சந்தேகம், சஞ்சலம்.

உமா:- மக்களிடம் அன்பு இல்லை அவர்களுக்கு?

ஏகா:- இருந்தால், மக்களுக்கு இதம் தரும் காரியத்துக்குப் பணம் இல்லையென்றுகூறிவிட்டுத், தேருக்குத் தருவார்களா, தேவி!

உமா:- நாதா! என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லையே...

ஏகா:- தேவி! நமது மனோ வேதனையும், நாட்டுஏழைமக்களின் மனோ வேதனையும் வீண்போகாது.

உமா:- நான் இப்போதே, இந்த வீண் காரியத்தை முன் நின்று நடத்தியவர் சொப்பனத்தில் தோன்றி புத்தி புகட்டப் போகிறேன்.

ஏகா:- வீண்வேலை, பார்வதி! வீண்வேலை! அந்த ஆசாமி ஏற்கனவே சொப்பனம் கண்டபடி தான் இருக்கிறார்! அவருடைய சொப்பனத்திலே, புண்யம் குவிவதும், பவுன்களாக மாறுவதும், புதுப் புது வியாபாரம் கிடைப்பதும், புண்ய மூர்த்தி என்று தந்திரக்காரர் புகழ்வதுமான, பல காட்சிகள் தோன்றிய படி இருக்கின்றன!

உமா:- புண்யம் வேண்டுமாம், புண்யம்! சொப்பனம் தான் காண வேண்டும்! யார், ஏழையின் துயரைத் தீர்க்க முன்வராமல், நடமாடும் தெய்வத்தை வழிபடாமல், இருக்கின்றனரோ, அவர்களை, நாம் நமது அருளைப் பெறும் அருகதையற்றவர் என்று ஒதுக்கித் தள்ளிவிடுவோம், என்பதை அவர்கள் அறியாரோ!

ஏகா:- அறிவர் சிற்சில சமயங்களில் மட்டும்—உமா! நாம் கேட்டால் போதாது, மக்கள் கேட்க வேண்டும்! வேதனையுள்ள நிலையில் நாங்களிருக்க, வெள்ளித் தேர் உற்சவமா, அடுக்குமா, நியாயமா, ஆண்டவன் இதை ஏற்றுக் கொள்கிறாரா, என்று கேட்கவேண்டும், ஏழைகள்......

உமா:- கேட்பார்களா, நாதா!

ஏகா:- நிச்சயமாகக் கேட்கப் போகிறார்கள். மக்களுக்கு அதற்குத் தேவையான நெஞ்சு உரம் அளிப்பதற்காகவே, நாம், நமது திருக்கூட்டத்தை அனுப்பிவைத்திருக்கிறோம்.

உமா:- நமது திருக்கூட்டமா? யார்?

ஏகா:- நீறு பூசாதவர்கள்; ஆனால் நேர்மையாளர்கள், உருத்திராட்சம் அணியார்; ஆனால் உள்ளம் தூய்மையானது, பாசுரம் பாடார்; ஆனால் பாசாங்குக் காரரல்ல......

உமா:- யார் நாதா அவர்கள்?

ஏகா:- அறிவு பரப்பும் திருக்கூட்டம்...

உமா:- அதற்கெனப் பெயர் உண்டோ, இல்லையோ?

ஏகா:- உண்டு, உமா! உண்டு! அந்தத் திருக்கூட்டத்தாரின் பெயர் தான் தன்மான இயக்கத்தினர் என்பது.

## நமது 'குருமார்கள்,

15-ம் பக்கத் தொடர்ச்சி

ராயும், எல்லோரையும் சமத்துவமாய் நேசிப்பவராயும், நல்லது கெட்டது தெரியாமல் அலைந்து கொண்டிருக்கிற மானிடர்களுக்கு உகந்த கல்வியும் அதன் பயனாக அறிவையும், அதன் பிரயோஜனமாக ஞானத்தையும் சத்தியத்தையும் போதிப்பவராயிருப்பவரே நமது குரு எக்குலத்தவராயிருந்தாலும் அவரே தெய்வம்.

போலிக்குருமார்வந்து உங்கள் அப்பன், பாட்டன் கொடுத்துவந்தபடி தலைவரி கேட்டால், அந்தக் காலம் வேறு இந்தக் காலம் வேறு, அவர்கள் கட்டை வண்டியில் போனார்கள்; நாங்கள் ஆகாயக் கப்பலில் போகிறோம்; அவர்கள் சக்கிமுக்கி தட்டினார்கள்; நாங்கள் மின்சார வில்லையை அழுத்துகிறோம். அவர்களுக்குப் பக்கத்தூர் சமாச்சாரம் தெரியாது; நாங்கள் உட்கார்ந்த இடத்தில் ஒரு நிமிடத்தில் அமெரிக்காக்காரரோடு பேசுகிறோம்; அவ்விடத்திய சமாச்சாரம் தெரிகிறோம்; உங்களுடைய சமாச்சாரமும் அறிவோம் என்று சொல்லி அனுப்பிவிட வேண்டியதுதான்.

# ★ நான் கண்ட அழகர்சாமி ★

[எஸ். வி. லிங்கம்]

தோழர் அழகர்சாமி இன்று நம்மிடம் இல்லை. சென்ற திங்கள் அவரைக் கடைசியாகத் தாம்பரம் மருத்துவ விடுதியில் கண்டேன். முதன் முதல் நான் கண்ட அழகர்சாமியாக அன்று தோன்றவில்லை. இருபத்தைந்து ஆண்டுகளாக உழைத்து, உழைத்து உருக்குலைந்தவராகவே அவருடைய உடல் நிலை தோற்றமளித்தது. "வா! லிங்கம்" என்று மெல்லிய குரலில் சொல்லிவிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றார். முடியவில்லை. தலையைப்பிடித்துத் தூக்கி முதுகுப் பக்கமாகக் கையால் அணைத்து நிமிர்த்தி உட்காரவைத்தேன். எனக்கு முன்பே அங்கு சென்றுஉட்கார்ந்திருந்த தோழர்கள் அண்ணாத்துரை, நெடுஞ்செழியன், தேவராசன், கணேசன், இளம்வழுதிமுதலியவர்களிடம் மெல்லப் பேச ஆரம்பித்தார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த ஐவரும் கண் கலங்கினர். அன்றிரவே பட்டுக்கோட்டை செல்வதாகச் சொன்னார் அழகரி. தேவராசன் அவர்களும் அண்ணாத்துரையும் ஆஸ்பத்திரி டாக்டரைத் தனியாகக் கண்டு, ஸ்பெஷல் வார்டில்வைத்து, உடம்பைக் கவனிக்கமுடியுமா? என்ன செலவானாலும்கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், டாக்டர், தனக்கு நம்பிக்கை இல்லையென்றும், அதனால்தான் ஊருக்குப் போகும்படி சொன்னதாகவும் தெரிவித்தார். நாங்கள் சென்ற காரிலேயே புறப்பட்டோம். சென்னைக்கு வரும் வழியில் பெரியார் அவர்களைச் சந்தித்தோம் — நடந்ததைச் சொன்னோம்.

* * *

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பட்டுக்கோட்டைக்கு ஒரு மாநாடு சம்பந்தமாகப் போயிருந்தேன். கூட்டத்தில் நான் பேசிக்கொண்டிருக்கும்போது, சில மாணவர்கள் கேள்வித்தாள்கள் கொடுத்தார்கள். பதில் கூறினேன். கேள்வித்தாள் கொடுத்ததற்குக் காரணமானவர்களைக் காண விரும்பினேன். அவர்களில் முதன்மையானவர் தான் அழகர்சாமி அவர்கள். இன்றைய இயக்க வளர்ச்சிக்குக் காரணமான ஊழியர்கள், தொண்டர்கள் என்பவர்களில் முதல் எண்ணிக்கையில் சேர்க்கப்பட வேண்டியவர்கள், காலஞ்சென்ற மாயவரம் நடராசனும், நாகை மணியும் ஆவார்கள். இரண்டு நாட்கள் பட்டுக்கோட்டையில் இருந்து மாநாடு சம்பந்தமாக நாங்கள் சென்ற வேலையை முடித்துக்கொண்டு, புறப்பட்டோம். அழகர்சாமியும் எங்களுடன் வந்தார். அப்பொழுது எங்கள் சுற்றுப்பிரயாணம் மாயவரம் மாநாட்டுக்காகப் பிரதிநிதிகளை வரும்படி செய்வதிலும், பணவசூலிலும் இருந்ததால், திருவாரூர், தஞ்சாவூர், கும்பகோணம் முதலானஊர்களுக்கும்எங்களுடன் அழகர்சாமியையும்அழைத்துச் சென்றோம். பகல் முழுவதும் மாயவரம் நடராசன் அவர்களுடன் வைக்கம் வீரர்கொள்கையைப் பற்றி அழகர்சாமி விவாதிப்பார். இவ்விதமாக ஏழெட்டு நாட்கள் கழிந்த பின்னர், நாகபட்டினம் சென்றோம். புகைவண்டி நிலையத்துக்கு எதிரில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. அந்தச் சமயம் ரயில்வே தொழிற்சாலை திருச்சிக்கு மாற்றப்படவில்லை. அன்று நடைபெற்ற கூட்டத்துக்கு மாயவரம் நடராசன் தலைமை வகித்தார். பத்து நாட்களாக எங்களுடன் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டே, ஆனால், எங்கள் கொள்கையிலும் வேலைத்திட்டத்திலும் சந்தேகத்துடன் விவாதம் செய்துகொண்டே வந்த அழகர்சாமி அவர்கள், அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசினார்

இலக்கிய சம்பந்தமாகத்தான் பேசப் போவதாகச் சொன்னார். தொல்காப்பியத்திலிருந்தும், சிலப்பதிகாரத்திலிருந்தும் ஏதேதோ மேற்கோள்கள் காட்டித் தனது பிரசங்கத்தைச் செய்துகொண்டு வந்தார். "காலைக் கதிரவனையே 'கந்தழி' என்பது, அது பல நிறங்களுடன் தோற்றமளிப்பதால், அத்தோற்றம் மயில்போல் தெரிகிறது, அதனைத் தமிழன் 'முருகு'—'முருகன்' என்றழைத்து, அதன் அழகுக்காக அதனை வணங்குகிறான்" என்றார். உடனே கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து, "அப்படியானால் பிள்ளையார் கிடையாது—முருகனும் இல்லையென்று சொல்லுகிறீர்களா" என்றார். கேள்வி கேட்டவர் தொழிலாளர்களிடம் செல்வாக்குள்ளவர். எனவே அவருடைய கேள்வி கூட்டத்தில் சிறு பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அடுத்த நிமிடமே அழகர்சாமி சொன்னார், "தோழனே! நான் சொல்லி வந்தது வேறு, நீ என்னைக் கேட்பது வேறு; இருந்தாலும் சொல்லுகிறேன்; பிள்ளையாரும் இல்லை, புடலங்காயும் இல்லை, உட்கார்" என்று சொன்னார். அழகர்சாமி கூட்டங்களில் பேசிய முதற் பிரசங்கமும் அதுதான்.

நாகையில் தொடங்கிய பிரசங்கத்தை இறுதியாக ஈரோடு மாநாட்டில், மனமுருகும்படி செய்த கடைசிப் பிரசங்கத்துடன் முடித்தார். இரண்டு கூட்டங்களிலும் நாகை காளியப்பன் இருந்தார்.

அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி நமது கட்சியில் சேர்ந்த காலம், நமக்கென்று ஒரு இயக்கப் பெயரைச் சொல்லிக்கொள்ளாமல் இருந்த காலம். அன்று பிராமணரல்லாதார் இயக்கம் என்றே சொல்லிக்கொண்டு வந்தோம். அவர் நம்முடன் வேலை செய்துவந்தார் என்ற போதிலும், அந்தப் பெயர் அவருக்குப் பிடிக்காமலே இருந்தது. மதுரை, மாயவரம் மாநாடுகளுக்குப் பின், கோயமுத்தூரில் ஜஸ்டிஸ் மாநாடு கூடியது. மாயவரம் நடராசன் அவர்களுக்குப் பெரியார் ஈரோட்டிலிருந்து தந்தி கொடுத்திருந்தார். அதன்படி நாங்கள் மூவரும் கோயமுத்தூர் சென்று மாநாட்டு வேலையைக் கவனித்தோம். ஜில்லா மாநாட்டை மாகாண ஸ்பெஷல் மாநாடாக ஆக்கவேண்டுமென்று தோழர் அழகர்சாமி விரும்பினார். அந்தக் காலத்தில் மாநாடுகள் கூட்டுவதற்குக் கட்சித் தலைவர்களிடம் அனுமதி பெறுவது மிகவும் கஷ்டமான காரியம். இதற்காக மாநாடு சம்பந்தமாக ஆதரித்தும்

எதிர்த்தும் பல கட்டுரைகளைத் தோழர் அழகர்சாமி தயாரிப்பார். வெவ்வேறு பெயர்களுடன் "ஜஸ்டிஸ்" பத்திரிகையிலும், 'மெயில்' பத்திரிகையிலும் இக்கட்டுரைகள் வெளிவரும்படி செய்வேன்.

சென்னையிலுள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து கோவை வரவேற்புக் கழகத்தாருக்கு வரும் தனிப்பட்ட கடிதங்களில், கோவையிலுள்ள மாறுபட்ட எண்ணமுடையோர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கும்.

காங்கிரஸ் பிரவேசத்தைப் பற்றியும், கதரை ஆதரிப்பது பற்றியும் மாநாட்டில் தீர்மானிக்க வேண்டியிருப்பதால், ஸ்பெஷல் மாகாண மாநாடாகக் கூட்டுவதே சரி என்பதைச் சகலரும் ஒப்புக்கொள்ளும்படி செய்த பெருமை தோழர் அழகர்சாமி அவர்களையே சாரும்.

மாநாடு கூடியது. பிரஸ்தாப விஷயமாக, விஷயாலோசனைக் கூட்டத்தில் இரண்டு நாட்கள் விவாதம் நடைபெற்றது. மிகவும் காரசாரமாக விவாதம் நடந்தது. கோவை ஆர். கே. சண்முகம் அவர்கள் எழுந்து, அந்தத் தீர்மானங்களை ஆதரித்துப் பேசினார். காங்கிரஸ் பிரவேசம் கூடாதென்பது பெரியாரின் கருத்து. ஆதலால் தோழர் அழகர்சாமியும் பெரியார் பக்கம்தான் என்று சொல்லவேண்டியதில்லை.

தோழர் சண்முகம் அவர்கள் காங்கிரஸ் பிரவேசத்தை ஆதரித்தார், அவர் பேச்சு, அக்கூட்டத்திலிருந்தவர்களின் மனதைக் கலைத்து, அவர் பேச்சுக்கு ஆதரவு தரக்கூடிய பாதையில் போய்க்கொண்டிருந்தது. அப்போது, அவர் பிரசங்கத்தை எதிர்த்துப் பேசக்கூடியவர்கள் கிடையவே கிடையாது என்றும் சொல்லலாம். சண்முகம் அவர்களின் பிரசங்கத்துக்கு மக்களின் ஆதரவும் கைதட்டலும் அதிகரித்தது. அவ்வாறு அழகாகவும், காரணங்களைக் காட்டியும் பேசப் பேச நமது அழகர்சாமி அவர்களுக்குக் கோபம் வளர்ந்து கொண்டே வந்தது. சண்முகம் அவர்கள் தம்முடைய பிரசங்கத்தில், மக்கள் கூட்டுறவைப் பெறுவதற்குக் காங்கிரஸ் கட்சி இன்னின்ன மாதிரி எல்லாம் செய்கிறது, நாமும் அக்கட்சியைப்போல் மக்கள் நட்பைப் பெறுவதற்கு இவைகளைச் செய்ய வேண்டும். இவைகளைச் செய்ய மறுத்தால், நீங்கள் அரசியலில் இருப்பதை விட்டுவிட்டு மடத்துப் பண்டாரச் சந்நிதிகளாகத் தான் இருக்கவேண்டும் என்றார். மக்கள் நீண்ட சரகோஷம் செய்தார்கள். உடனே அழகர்சாமி அவர்கள் எழுந்து நின்றார். 'ஐயா' என்றார். "சந்தர்ப்பத்துக்குத் தக்க முறைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்கிறீர்களே! அதைச் சரியென்றே ஒப்புக்கொள்வோம். அதுவேதான் வழி என்றால், சந்தர்ப்ப வாதியாக இருந்து பெறும் புகழ் பெற்ற மயிலைச் சீனுவாசய்யங்காரின் இன்றைய நிலை என்ன" என்று கேட்டார். உடனே பொதுமக்கள் நீண்ட கரகோஷம் செய்தார்கள். இவ்விதம் தோழர் சண்முகம் அவர்கள் போன்றாரின் பிரசங்கத்தை எதிர்த்துப் பேசும் தைரியமும் திறமையும் அவருக்கு அன்றே ஏற்பட்டுவிட்டது.

* * *

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், பிரசங்கியென்றால் பெரியார் ஒருவர்தான். காலஞ்சென்ற மா. ரா. குமாரசாமி அவர்கள் அடுத்த பிரசங்கியார். அது பெரும்பாலும், அருட்பார்வை அப்படியே 'குடி அரசு' பத்திரிகை ஆதரிப்பதாக எடுத்துக்காட்டுவதாக இருக்கும். இயக்க வளர்ச்சிக்காக இயக்கத் தலைவர் பெரியாரால் பேசப்படும் பேச்சுக்களிலும் எழுதப்படும் எழுத்துக்களிலும் அதிகமாக உபயோகப்படுத்தப்படும் வார்த்தை "சுயமரியாதை" என்பதாகும். மூன்றுஆண்டுகள் இயக்கம் எங்கும் பலமாக வேலை செய்தது. ஆனால், இயக்கத்துக்குப் பெயர் இல்லை. புதுப்பெயர் என்று எடுத்துக்கொண்டால், பட்டுக்கோட்டையில்தான் முதன்முதல "சுயமரியாதைச் சங்கம்" என்ற பெயரை அவ்வூர்த்தோழர்கள் உண்டாக்கினார்கள். அதன்பின்னர், திருநெல்வேலியில் தோழர் கே. சுப்ரமணியம் அவர்கள் சுயமரியாதைக்கூட்டம் (மாநாடு) கூட்டினார். அதன்பின்னர்தான், சுயமரியாதைச் சங்கம் என்றும், சுயமரியாதைக்கட்சி, மாநாடு என்றும் ஓங்கி வளரத் தொடங்கியது

* * *

பிரமணிய தத்துவங்களைக் கண்டிப்பதும், பிரமணியத்தை ஒழிப்பதுமே சுயமரியாதை இயக்கத்தின் வேலை என்று ஏற்பட்ட மூன்று ஆண்டுகள் வரையிலும், மதசம்பந்தமான கண்டனப் பிரசாரங்களுடன், அரசியலைப் பற்றியும் அவ்வப்போதுள்ள அரசியல் நிகழ்ச்சிகளையும் சேர்த்துப் பிரசங்கம் செய்தவர் நமது கட்சியில் முதன் முதல் அழகர்சாமியேயாகும்.

* * *

தென்னிந்திய ரயில்வே ஒர்க்ஷாப் நாகையிலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்ட ஓராண்டுக்குப்பின், ரயில்வே வேலை நிறுத்தம் நடைபெற்றது. இன்று உள்ளதைப்போல் தொழிலாளர்களாக இல்லாதாரே தொழிற்கட்சித்தலைவர்களாக இருக்கும் பழக்கம் அன்று இல்லை. முக்கியமான தொழிலாளர்களே தொழிற் கட்சியை நடத்தியகாலம் அது. ரயில்வே வேலைநிறுத்தப்போராட்டகாலத்தில், பெரும் பங்கெடுத்துக்கொண்டு, நமது இயக்கத்துக்கும், தொழிலாளர்களுக்கும் ஓர் பிணைப்பை உண்டாக்க வேண்டுமென்று முயன்ற நண்பர்களில் நண்பர் அழகர்சாமி அவர்கள் முதன்மையானவர். அடுத்தவர் திருமலைச் சாமியாவார்.

* * *

ரஷ்ய நாட்டில் பொதுவுடைமைச் சர்க்கார் உண்டாவதற்கு முன்னமேயே, இந்தியாவில், அகில இந்திய பொதுவுடைமை மாநாட்டைக் கான்பூரில் கூட்டினார்கள். பொதுவுடைமையின் பேரால் முதலில் கைதியாக்கப்பட்டவர்கள் மௌலானா ஆசாத் மோகினியும், தோழர் எம். சிங்காரவேலரவர்களுமாவார்கள். ரயில்வே போராட்ட காலத்தில், தோழர் சிங்காரவேலரின் கூட்டுறவு கிடைத்தது. பெரியாரைப் பற்றிச் சிங்காரவேலருக்கு அவநம்பிக்கையும் தப்பெண்ணமும் இருந்து வந்தது. ஆனால், நம்மைப் பற்றிச் சிங்காரவேலர் நன்றாக உணர்ந்தபின் நம்முடன் சேர்ந்துகொண்டார். இப்பெருமையும் தோழர் அழகர்சாமியுடையதேயாகும். அக்காலத்தில் அமெரிக்காவில் பொது உடைமைக்காரர்களான தோழர்கள் ஜாக்கோ, வான்சிட்டி என்ற இரண்டு தலைவர்

ஜீ எலக்ட்ரிக் நாற்காலியில் உட்கார வைத்து அமெரிக்காவில் கொன்றார்கள். அதைக் கண்டிக்கச் சென்னையில், ஓர் கூட்டத்துக்குச் சிங்காரவேலர் ஏற்பாடு செய்திருந்தார். டாக்டர் பி. வரதராஜுலு அவர்கள் தலைமை வகிப்பார் என்றும், சிங்காரவேலர் பேசுவார் என்றும் பிரசுரங்கள் வெளியிடப் பட்டிருந்தன.

உடல் நலமில்லாததால் டாக்டர் வரதராஜுலு வரவில்லை. மூர்மார்க்கெட்டில் பெரிய கூட்டம். ஏராளமான போலீஸ் பாராவும் இருந்தது. தோழர் சிங்காரவேலர் மட்டுமே வந்திருந்தார். பொதுக்கூட்டத்தில் போலீஸ் தடபுடல் காட்டுவதைப் பார்ப்பது அப்போது ஆரம்ப காலமாதலால், கூட்டம் மேடையை விட்டுத் தொலைவாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இதில் நானும் அழகர்சாமியும் இருந்தோம். தோழர் அழகர்சாமி உடனே மேடைக்குச் சென்றார். நானும் கூடப்போனேன். எங்கள் வழக்கப்படி, என்னைப் பேசும்படி கூறினார். நான், சிங்காரவேலர் அவர்களால் கூட்டப் பெற்ற அக்கூட்டத்தைப் பற்றிச் சில கூறினேன். பின்னர், தோழர் அழகர்சாமி அவர்கள், சொற்பொழிவாற்றத் தொடங்கினார். பொதுமக்கள் மெள்ள மெள்ள மேடையருகில் வந்து உட்கார்ந்தார்கள். அழகர்சாமி பேசும் போது, "ஓர் செம்படத் தொழிலாளியும், ஓர் சக்கிலித்தொழிலாளியும் அமெரிக்காவில் கொலை செய்யப்பட்டார்கள். அதைக் கண்டிக்க நாம் இங்கு கூடியிருக்கிறோம். நமது செம்படத் தொழிலாளியான தோழர் சிங்காரவேலர் அவர்கள் தூக்கிலிடப்படும் காலம்கூட வரலாம், அப்படி ஏற்பட்டால் அதுவே நாட்டின் விடுதலை நாள்" என்பதாகப் பேசினார். அதன் பின், தலைவர் சிங்காரவேலர் பேசினார். அன்றுமுதல் தான் நமது கட்சிக்கும் சிங்காரவேலருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஓரிரு ஆண்டுக்குப்பின்னர் சுயமரியாதை இயக்கத்தையும், அதன் தலைவர் பெரியாரையும் பற்றி நன்கு பாராட்டிப் பேசியும் எழுதியும் வந்தார். இயக்க வளர்ச்சிக்கு முக்கியமானவராகச் சிங்காரவேலர் இருந்ததுடன், இயக்கம் என்றால் படித்தவரும் பாமரரும் ஒப்புக்கொள்ளும் முறையில் இயக்க

(12-ம் பக்கம் பார்க்க)

## [illegible]

16-ம் பக்கத் தொடர்ச்சி

அன்புப் பணியாக ஒருவர் மற்றவரை இழுப்பதையோ, சுமப்பதையோ பற்றி நமக்கு அக்கறையில்லை. ஆனால் அது தொழிலாகவும், சாதி முறையாகவும், கடமையாகவும் மாறி மனிதனை அலங்கோலப்படுத்துவதையே நாம் வெறுக்கிறோம்.

சீமான் வீட்டுச் சிறு குழந்தைகளை வண்டியிலிட்டு வளர்ப்புத் தாதியர் தள்ளிச் செல்லுகின்றனர். இதை மன்னித்துவிடலாம். ஆஸ்பத்திரிகளிலே நோயாளிகளைத் தள்ளவும், தூக்கவும் ஆட்களுண்டு. அது இன்றியமையாத சேவை.

கிராமங்களில் ஒரு காலத்தில் கல்யாண ஊர்வலங்கள் மனிதர்களால் சுமக்கப்படும் மொட்டைப் பல்லக்குகளில் வருவதுண்டு. அவையும் இன்று அபூர்வமாகி நான்கு சக்கர வண்டிப் பல்லக்குகள் வந்துவிட்டன. நவீன மோட்டார் வண்டிகளும் போட்டி போடுகின்றன.

பிணத்தைப் பாடையின் மீதோ, பல்லக்கின்மீதோ போட்டு மனிதர்கள் தூக்கிச் செல்வதுண்டு. இதுவும் தற்போது காந்தி, ஜின்னா, சரோஜினி முதலியோரின் சவச் சடங்குகளின்போது மாற்றப்பட்டு மோட்டார் வண்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அண்மையில் சென்னைக்கு வந்து சென்ற சர்தார் படேல் ராஜாஜி மாளிகையின் படிக்கட்டுகளின்மீது ஏறிச் செல்ல முடியாதவாறு பலவீனமாயிருந்தார். அப்பொழுது அன்பர்கள் முற்கால வழக்கப்படி அவரைப் பல்லக்குமீது சுமந்து செல்ல ஏற்பாடு செய்யவில்லை. அவர் ஏறி வந்த ஜீப் வண்டியை அப்படியே படிக்கட்டுகளின்மீது ஏற்றிச் செல்ல வழி செய்தார்கள்.

காலம் மாறுகிறது. மக்கள் மனப்பான்மையும் வேகமாக மாறுகிறது. பழைய வழக்கங்கள் பையப் பைய விடை பெற்றுக்கொள்கின்றன. பண்டைய சின்னங்கள் மாயமாய் மறைகின்றன. ஆனால் பழைய பல்லக்கு மட்டும் சிரஞ்சீவியாயிருப்பானேன்?

மதத்தின் பேரால், ஆதிபத்தியத்தின் பேரால், ஆண்டவன் பேரால் ஆதி காலத்து அநாகரிகச் சின்னங்களாகிய அவை இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. புண்ணியமும் புனிதத் தன்மையும் அவற்றுக்கு ஏற்றப்பட்டுள்ளன. மதிப்பும், மரியாதையும் செலுத்தப்பட்டு வருகின்றன.

மன்னர்களும், மடாதிபதிகளும் 1949 மாடல் புதுரக மோட்டார்களிலே பயணம் செய்தபோதிலும், வெட்கமின்றி பல்லக்குகளையும் பயன்படுத்தி வருகின்றனர் பழமை நிலை நாட்டுவதற்காக. என்ன விந்தை!

தந்தி மூலமும், ஆகாய மூலமும், தபால் அனுப்பத் தெரிந்துகொண்ட பின்னரும் நாரை விடு தூது அனுப்புவாருண்டா? மின்சார விளக்குகள் வந்த பின்னரும் சக்கிமுக்கிக் கற்களைத் தேடுவாருண்டா? மாடமாளிகைக் காலத்திலே மரப்பொந்தை நாடுவாருண்டா? விமான யுகத்திலே பல்லக்கின் மீது ஏறலாமா? இது வேதனை தரும் விளையாட்டுத்தனம் அல்லவா? என்று நாம் கூறினால் உடனே பக்தகோடிகள், ரிக்ஷா ஒழியட்டும் என்று கூறுவோர் சிலர் கூட்டப், பதை பதைப்பார்கள். மெய்யன்பர்கள் மெய் விதிர்ப்பார்கள். மடங்களிலும், அரண்மனைகளிலும் கோவில்களிலும் கனகதண்டிகள் கட்டாயம் இருந்தே தீரவேண்டும். அவை புனிதமானவை, புண்ணியத்தின் பயன் என்று வாதிடுவார்கள்.

ரிக்ஷா ஒழிப்பு வாதிகள் இதைப் பற்றி நன்கு சிந்திக்கவேண்டும். ரிக்ஷாக்காரரின் வேதனையைக் காண்பவர்கள், பல்லக்குச் சுமப்பவனின் தோள் வேதனையையும் உணரவேண்டும். ரிக்ஷாவிலே இழிவைக் காண்பவர்கள் பல்லக்குகளிலே அடிமைத்தனத்தைக் காணவேண்டும்.

பகுத்தறிவுள்ளவர்கள் இன்று ரிக்ஷாவில் ஏறக் கூசுகின்றனர். ஆனால் பல்லக்கில் பவனி வருகிறவர்கள் கொஞ்சங்கூட வெட்கமின்றி, ஆடம்பர, அணிகலன்களுடன் பெருமிதமாகக் காட்சியளிக்கின்றனர்.

கை ரிக்ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்ஷாக்களும்; மோட்டார் ரிக்ஷாக்களும் வந்துவிட்டன. அது போல் மன்னர்களும், மடாதிபதிகளும் பவனிவர மோட்டார்கள் இருக்கின்றன.

"பழையன கழிதலும்; புதியன புகுதலும்
வழுவல; கால வகையினானே"

என்று கூறும் நூல் வழக்குப்படி வேண்டாதவற்றை விலக்குவதே அறிவுடைமையாகும்.

திராவிட நாடு

ஞாயிறு] 17—4—49 [காஞ்சி

# வல்லூறுகளுக்கு அழைப்பு

யார் இந்த வெள்ளையர்? தொலை தூரத்திலிருந்து இங்கு வரக்காரணம் என்ன?

இவர்களா! பாபம், பிழைப்புக்காக இங்கு வந்திருக்கிறார்கள். வியாபாரிகள்.

நம் நாட்டிலே இவர்கள் தங்கி இருந்து வியாபாரம் செய்ய, தொழில் நடத்த, அனுமதி கிடைக்குமா?

அனுமதி தரவேண்டும் என்று, கெஞ்சிக் கேட்டுக்கொள்வதற்காகத் தான், ராஜசபைக்குச் செல்கிறார்கள். மண்டியிட்டு வணங்கி, மன்னனிடம் முறையிட்டு, அனுமதி பெற்றான பிறகு, வியாபாரம் செய்து, பிழைத்துக் கொள்வார்கள்.

* * *

1601-ம் ஆண்டுக்குப்பிறகு பரங்கியர், இங்கு புகுந்து, வியாபாரம் செய்யும் அனுமதியைப்பெற, கெஞ்சிக் கிடந்தநிலை, மேலே தீட்டப்பட்டிருப்பது.

* * *

யார் இந்தக் கருநிறத்தார்—அதிகக் கருப்பாகவும் காணோம்! பழுப்பு நிறத்தவர்களாக உள்ளனர்! எதற்காக இங்கு வந்துள்ளனர்?

இவர்கள் இந்திய நாட்டுத் தலைவர்கள்! தங்கள் நாட்டிலே, வந்திருந்து தொழில் நடத்தும்படி, நம்மைக் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறார்கள்.

அவர்கள் நாட்டிலே, நாம்சென்று, தொழில் நடத்துவதா? ஏன்? அவர்களால் முடியவில்லையா, தொழில் நடத்த?

போதுமான பணமும், தேவையான திறமையும் இல்லை.

ஓஹோ! அதனால் தான் நம்மை நாடி வந்துள்ளனரோ?

ஆமாம், பாபம்! ரொம்பவும், வேண்டிக்கொள்கிறார்கள். நமக்கு அங்கு சகல வசதியும் உரிமையும் தருவதாகக் கூறுகிறார்கள்.

* * *

1949-ம் ஆண்டிலே, அமெரிக்கா போன்ற நாடுகளிலே உள்ளவர்கள் பேசிக்கொள்வதும் தீட்டப்பட்டிருக்கிறது.

* * *

மண்டியிட்டு அனுமதி கேட்ட காலம், பதினேழாம் நூற்றாண்டு!

மனுச்செய்து கொண்டு, மனமகிழ்ச்சி யூட்டி, அவர்களை, அழைத்து வருவது, இருபதாம் நூற்றாண்டில்!.

உள்ளே புக முடியுமோ என்று அஞ்சிக்கிடந்த அன்னியருக்கு இப்போது உபசாரம் பலமாக நடக்கிறது, உள்ளே, வரச்சொல்லி.

• • •

அன்னியரின் நுழைவு, அக்ரமமானது, ஆதிக்கத்துக்கு வழிகோலுவது, அதிலேயும், வியாபார, தொழில், சம்பந்தமாக அன்னியர், நுழைவது, மக்களின் வாழ்வைக் கெடுக்கக் கூடியது—வியாபாரியாக உள்ளே நுழைய முதலில் இடம் கிடைத்து விட்டால், பிறகு அவர்கள், ஆதிக்கக்காரராகி, நமது அரசு கூடக் கெடும்படி செய்துவிடுவர், என்று அஞ்சிய, அந்நாள் மன்னர்கள், உள்ளே நுழைய விரும்பிய ஆங்கிலருக்குப் பல நிபந்தனைகளை விதித்தனர்-இன்னின்ன கட்டுத்திட்டங்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று முறைவகுத்தனர்.

எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு, அடக்கமாகவே, வியாபாரத்தைத் துவக்கினர், வெள்ளையர்.

இரண்டோர் நூற்றாண்டுகளுக்குள், பண்டகசாலைக்குப் பக்கத்திலே பாசறைகள், கணக்கெழுதுவோருக்குத் துணையாகக் குண்டு வீசிகள், என்ற நிலை பிறந்து விட்டது.

கோட்டைகள் கட்டிக் கொண்டனர் — செயின்ட் ஜார்ஜ் கோட்டை போல!

எந்த ராஜசபையில் மண்டியிட்டு நின்று, அனுமதி கோரினரோ, அதே ராஜசபைகளிலே, பேரம் பேசவும், பிறகு, படைஎடுக்கவும் துணிந்தனர்.

வியாபாரியாக வந்தனர் உள்ளே-பணிவுடன்—அனுமதியின் பேரில்—பிறகோ, வேந்தராயினர்—அடக்கலாயினர் இந்நாட்டை.

இந்தக் கேட்டினைக் களைந்து நாட்டை மீட்டிட, எண்ணற்ற இளைஞர்கள், தியாகத் தீயிலே குதித்தனர்—நாடு, சுயாட்சி பெற்றது. ஆனால்.........!

தனிப்பட்ட முதலாளிகள் பெரும் தொழிற்சாலைகளை வைத்து நடத்தி இலாபவேட்டையில் ஈடுபடும் போக்கே, பொருளாதாரச் சுரண் டல் முறை என்றும், இந்தக்கேடு நீக்கப்பட்டாலொழிய, ஏழைக்கு வாழ்வும் நாட்டுக்கு வளமும் கிடைக் காது என்றும், மேடை அதிரத் தலை வர்கள் முழக்கமிட்டனர்.

இலாப உணர்ச்சியை ஒழித்து சேவா உணர்ச்சியைப் புகுத்தி முத லாளித்துவமுறையின், நச்சுக்கொள் கையை, தூய்மைப்படுத்த வேண்டும் —அப்போது தான், சமூகம் சுகப் படும், நாடு புதுவாழ்வு பெறும் என்று உத்தமர் காந்தியார் உரைத் தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பெரும் கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் அவன், உள்நாட்டு உழைப்புறிஞ் களைத் தன்னுடன், கூட்டாளியாக—பங்காளியாக ஆக்கிக் கொண்டான் ஏழை, இந்தக் கூட்டுக்கம்பெனியால் கொள்ளையடிக்கப்பட்டுத்தேய்கிறான் என்று கர்ஜனை செய்தனர், தலைவர் கள். உள்நாட்டு முதலாளிகளின் இலாபவேட்டையும், ஏகாதிபத்யத் தின் சுரண்டல் திட்டமும், இரண் டும் ஒழிக்கப்படுவதுடன்,வெளிநாட் டார் இங்கு, பணம் போட்டு தொழில் நடத்தி, அதன்மூலம் இலா பம் அடைவதுடன், நாட்டின் ஜீவ நாடிகளைக் கைப்பற்றி, ஆதிக்கம் செலுத்தி, நம்நாட்டை ஆட்டிப் படைக்கும் கொடுமை அடியோடு ஒழிக்கப்படவேண்டும், அன்னிய நாட்டுமூலதனம், இங்கே புகுந்து ஆதிக்கம் பெறுவதற்கு நாம் இட மளிக்கக்கூடாது, என்று வீராவேச மாகத் தலைவர்கள் பேசிவந்தனர். ஆனால், இப்போது, என்ன நடை பெற்றுக்கொண்டு வருகிறது?

தொழில்களைச் சர்க்கார் உடை

மையாக்குவது, என்ற திட்டம்நிறைவேற்றப்படவில்லை.

இந்தத்திட்டத்தை முதலாளிமார்கள் பலமாகக் கண்டித்துள்ளனர்.

அவர்கள் கண்டித்தது ஆச்சரியமூட்டக்கூடியதல்ல, நேரு, பட்டேல் போன்ற தலைவர்களே, இப்போது அந்தத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டனர்.

பெருந்தொழிற்சாலைகள், எப்போதும்போலவே, முதலாளிகளிடமே உள்ளன.

புதிய தொழிற் சாலைகளையும் அமைக்கும்படி, அந்தமுதலாளிகளை முதலாளித்துவ முறையை ஒழித்தே தீருவோம் என்று முழக்கமிட்ட, தலைவர்களே வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

இலாபவேட்டையைக் கண்டித்த அதே தலைவர்கள், முதலாளிகள், இலாபநோக்கம் இல்லையேல்,தொழில் ஆர்வம் பிறக்காது என்று பச்சையாகக்கூறிவிட்டதுகேட்டு,கோபமோ பயமோ கொள்ளாமல், உபதேசம் கேட்டு உண்மையை அறிந்து கொண்ட உத்தமச்சீடன், குருவின் முன் கைகட்டி நிற்பதுபோல, முதலாளிகள் முன்நின்று, இலாப நோக்கத்தைவிட்டு விடும்படி கூறவில்லை— அந்த நோக்கத்தைக் கண்டிப்பதை விட்டுவிட்டோம் — தொழில்களை நடத்துங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறார்கள்.

சர்க்காரின் தலையீடும் இல்லை — இலாப வேட்டைக்குத் தடையும் கிடையாது என்ற இரண்டு வரம் கிடைத்திருக்கிறது, 'சபிக்கப்பட்டு வந்த' முதலாளிகளுக்கு!

இதுமட்டுமா? வெளிநாட்டாரின், "முதல்" இங்கு முகாம் அமைத்துக் கொண்டு, ஆதிக்கம் செலுத்துவது கூடாது என்று முழக்கமிட்ட அதே தலைவர்கள், வெளிநாட்டு "முதல்" வேண்டும், ஏராளமாகவே வண்டும், தங்கு தடையின்றி, உள்ளே வரலாம், என்று உபசாரமொழி பேசுகின்றனர்.

புதிய புதியதொழில்களைத்துவக்க, ஏராளமான 'பணம்' முதலாகப் போட முன்வரும்படி, வெளிநாட்டாரைக், குறிப்பாக, அமெரிக்காவை நேருவே, கேட்டுக்கொள்கிறார்.

போட்ட 'முதல்' கெட்டுவிடாது! துவக்கப்படும் தொழிலை, துரைத்தனம், கைப்பற்றிக்கொண்டுவிடாது! கிடைக்கும் இலாபத்துக்குக் குந்தகம் ஏற்படாது! இலாபத்தை உங்கள், நாட்டுக்குக்கொண்டு போவதற்கு ஒருதடையும் ஏற்படாது! வருக! வருக! என்று நேருவே வருந்தி வருந்தி அழைக்கிறார்.

வல்லூறுகளை அழைக்கிறார், கிளி கொஞ்சும் சோலைக்கு—விருந்துக்கு!

கையிலே 'கவண்' இல்லை! வலை' ஏதும் இல்லை! தினை உண்டு! தீங்கனிகள் பலஉண்டு, தத்தைகள் உண்டு! —என்று விவரிக்கிறார்.

புதிய ஆட்சியின்போக்கு எங்ஙனமிருக்குமோ, சமதர்மத்திட்டத்தைச் சதாபேசிக்கொண்டிருந்தவர்களல்லவா இப்போது சர்க்காரை நடத்துகிறார்கள் — ஏழை பங்காளர்களல்லவா இப்போது ஆளவந்தார்களாகியுள்ளனர், இவர்கள் முதலாளித்வ முறையைக் கருவறுத்துவிடுவதாகச் 'சபதம்' செய்தவர்களாயிற்றே, அன்னிய நாட்டுப் பொருளாதாரப் பிடியிலிருந்து நாட்டை விடுவித்து, நல்வாழ்வு, தரப்போகிறோம் என்று மக்களிடம் வாக்குக் கொடுத்தவர்களாயிற்றே, இவர்களைநம்பி, நாம் எப்படி 'இந்தியாவில்' பணம் போட்டுத் தொழில் நடத்துவது, இலாபமோ, நிரந்தர நிலையோ, ஏது, என்று பயந்தனர், ஆங்கிலோ—அமெரிக்க முதலாளிகள். இன்றோ, அவர்களை அழைக்கின்றனர், தலைவர்கள்!!இலாபம்உண்டு, வாரீர்! தயங்காமல்வாரீர்! தடை ஏதும் இராது வாரீர்!-என்று.

கண்ணே வருக! கனிரசமே வருக! —என்று பிள்ளைத்தமிழ் பாடும்,தலைவர்களாகிவிட்டனர், "ஒழித்தே தீருவோம்" என்று முழக்கமிட்டுவந்த, அதே தலைவர்கள்.

வல்லூறுகள் வரப்போகின்றன, விருந்துண்ண! விசேஷ அழைப்பின் பேரில்!!

சர்க்காரின் திட்டம் தெளிவாக்கப்பட்டுவிட்டது, எனவே இனிச் சந்தேகமோ அச்சமோ கொள்ளாமல், தாராளமாகவந்து 'தர்பார்' செய்யலாம், என்று தைரியம் கூறுகிறார், சர். விஸ்வேஸ்வரார், டாலர் சீமான்களுக்கு!

பதினேழாம் நூற்றாண்டு:— அன்னிய ஆதிக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், படுகொலைகளும், பயங்கரச் சண்டைகளும் நடத்தியாக வேண்டிய நிலை இருந்த காலம்.

இருபதாம் நூற்றாண்டு:— அன்னிய ஆதிக்கம், மிக மிக நாசுக்கான முறையிலே, தந்திரமாக, பிறர் அறியாவண்ணம், புகுத்தி விடுவதற்கான, வழி முறை வளர்ந்துவிட்ட காலம்.

ஆளைப் பிடித்து மிருகத்தனமான முறையிலே அடித்து,க் கொன்று போடும் காட்டு மிராண்டி முறை மாறி, ஒரு சிறு ஊசியில் விஷத்தைத் தோய்த்துவைத்து அதனால் அவனும் அறியாவண்ணம் குத்தி ஆளைச் சாகடிக்கும், சாகசக் கொடுமை வளர்ந்திருப்பது போலவே, இன்று ஒருநாடு மற்றோர் நாட்டின்மீது ஆதிக்கத்தைப் புகுத்துவதற்கு, மிக மிக இலகுவான முறைகளைக் கற்றுக்கொண்டுள்ளன, வல்லரசுகள்.

மூலதனம் போடுதல்—தொழில் அபிவிருத்தி செய்தல் — நிபுணர்களைத் தருவது—என்பன போன்ற முறைகளின் மூலம், வல்லரசுகள், இன்று பெரும்படைகளால் சாதிக்க முடியாத காரியத்தை எல்லாம், எளிதாகச் சாதித்துக் கொள்கின்றன.

உருட்டும் கண்! மிரட்டும் சொல்! —ஒரு காலத்திலே, ஆதிக்கக் கருவிகள்.

இன்று, அன்புப் பார்வை, உபசார மொழி, ஆதிக்கக் கருவிகளாகிவிட்டன.

இத்தகைய சூழ்நிலையின்போது, 'அன்னிய மூலதனத்தை, இங்கு, வரவழைப்பது, ஆதிக்கக்காரரை, நாமாக வலிய வலிய வரவழைக்கும், விபரீதமான காரியமாகும்.

அன்னியர்கள், இங்கு பல ஆயிரம் கோடி பவுன்களையோ, டாலர்களையோ, கொண்டுவந்து, புதிய தொழிற்சாலைகளை அமைத்துக் கொண்டு, இலாபவேட்டை ஆடத் தொடங்கினால், அந்த 'ருசி' அவர்களை, மீண்டும் ஓர் புதிய ஏகாதிபத்யத்தை — தந்திரமான ஏகாதிபத்யத்தை அமைக்கும் படியே தூண்டும். அந்தச் சமயத்திலே, நம் நாடு, அவர்களின் பிடியிலிருந்து, விடுபடுவதும், கஷ்டமாகிவிடும்.

அமெரிக்கா, ஒரு கரத்தில் பணக்குண்டும், மற்றோர் கரத்தில் [illegible]

குண்டும் வைத்துக்கொண்டு, அகில உலகிலும் தன் ஆதிக்கத்தைப் பரப்பும் திட்டத்துடன் வேலை செய்து வருகிறது.

இதனைத் தகர்க்கச், சம்மட்டி ஏந்தி நிற்கிறது சோவியத் நாடு.

உலகு, இரு முகாம்களாகி விடுமோ, என்ற எண்ணம், பலருடைய மனதைக் குடையும் காலம் இது.

இந்தச் சமயத்திலே, வெளிநாட்டு மூலதனத்தை, வேண்டி வேண்டி அழைப்பதும், பழைய கொள்கைகளை, முன்னாள் முழக்கங்களை மறந்துவிட்டு, வெளி நாட்டாருக்குத் திருப்தியும் தைரியமும் ஏற்படும் அளவிலும் முறையிலும், உபசாரம் பேசுவதும், சலுகைகள் காட்டுவதும், வசதிகள் செய்து தருவதும், நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுக்கும், துரோகக் காரியமாகும்.

இலாப மோப்பம் பிடித்துக் கொண்டு, பணம் படைத்தவர்கள், தாமாக வருவதும், வருகிறவர்களின், கொடிவழிப் பட்டியைக் கண்டறிந்து அவர்களுக்கு நாம் நிபந்தனைகள் விதிப்பதும், முறையாயிருக்க, இங்கு தலைவர்கள், முதலாளிகளைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து, கெஞ்சிக் கூத்தாடி நின்று, அவர்களுக்கு என்ன வசதி தேவை, என்ன உரிமை தேவை என்று வினயமாக விசாரித்து, அவர்கள் கேட்பதற்கெல்லாம் இணங்கும் போக்குக் கொண்டுள்ளனர் தலைவர்கள். இது கேவலமானது மட்டுமல்ல, கேடு தருவது. பாமரன் மொழியிலே கூறுவதானால், நாட்டை அமெரிக்காக்காரனிடம் அடகுவைத்துக் கடன் வாங்குகிறார்கள் என்று கூறவேண்டும். ஏன், தலைவர்கள், இந்தத் தீய பாதையில் செல்கிறார்கள்? நாட்டை மீட்டிடும் நற்பணி புரிந்த வீர இளைஞர்கள், ஏன், இதனை அனுமதிக்கிறார்கள்?

வல்லூறுகளுக்கு விருந்து! விருந்துக்கு அழைப்பு!! வாய் திறவாமல் இருக்கின்றனர் மக்கள்—வர இருக்கும் விபத்தை அறியாமல்!

●

# 8-க்கும்—16-க்கும்!

– ✲ –

"செல்வாக்குக் குறைந்துவிட்டது என்று செப்பிடுவோரே, செங்கற்பட்டை நோக்குவீரே! பலம் சரிந்துவிட்டது, பண்பு குன்றிவிட்டது, ஆதரவு அற்றுவிட்டது என்று வாய்வலிக்கக் கூவிடுவோரைக் கண்டு செங்கற்பட்டு சிரிக்கிறதே, பாரீர்! காந்திய நெறியில், சத்தியம் வழிகாட்ட, அகிம்சைக் கோல் ஊன்றி, முன்னேறும் காங்கிரசை, எதிர்த்து நிற்போர், இவ்வாழி சூழ் அவனியில் எவர்தான் இருக்கமுடியும்! குன்றாச் சிறப்பும், குமிழ் சிரிப்புங் கொண்டு காங்கிரஸ் வெற்றிவலம் வருவதைச் செங்கற்பட்டு மாவட்டத்திலே காணீர்! செங்கற்பட்டு மாவட்ட மேல்சபைத் தொகுதியின் உபதேர்தலில் காங்கிரசுக்கு வெற்றி! மீண்டுமோர் வெற்றி! வெற்றிக்குமேல் வெற்றி!" என்று வெற்றிக் கீதம் பாடி வீதிவலம் வரும் சூழ்நிலை காங்கிரஸ்காரர்களிடத்தே இன்று ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்திருப்பது உண்மைதான்; வெற்றி மணமும் கமழத்தான் செய்கிறது, புண்ணுக்குமேல் பூசப்பட்ட புனுகு போல!

செங்கற்பட்டுத் தொகுதியில், மேல்சபை உபதேர்தலில், காங்கிரசின் சார்பாகப் போட்டியிட்ட டாக்டர் சீனிவாசன் வெற்றி பெற்றார்! 'மகத்தான' காங்கிரசின் சார்பாக வெற்றி பெற்றார்! சாதாரணமாக'— சுயேச்சையாக நின்று போட்டியிட்ட தோழர் பாலகிருஷ்ணனை எதிர்த்து வெற்றி பெற்றார்! "மகத்தான" காங்கிரசின் பேரால் அபரிமிதமான வோட்டுக்களைப் பெற்றா, இல்லை! எண்ணி எட்டே ஓட்டுக்களை அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார்! எட்டுத் திக்கும் புகழ்பரப்பி நிற்கும் காங்கிரஸுக்கு, அதிகமாகக் கிடைத்த ஓட்டுக்கள் எட்டு!

உடலிலே ஏற்பட்டுள்ள புண்ணினின்றும் வீசும் துர்நாற்றத்தைச் சற்றே தடுத்துவைக்கப் புனுகு தடவுவதுபோல, காங்கிரஸ் உடலிலே ஏற்பட்டிருக்கும் ஊழல் புண்ணை மறைக்க இவ்வெற்றிப் புனுகு சிறிது பயன்படக் கூடும்.

இவ்வெற்றியைக் கொண்டு காங்கிரசின் புண்ணை மறைக்கக் காங்கிரஸ்காரர்கள் முயலுவார்கள்; ஆனால் புண் உடலிலே புரையோடும் அளவுக்கு வளர்ந்திருப்பதைக் காணப் பொதுமக்கள் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டார்கள்.

இத் தேர்தலில் ஏற்பட்டுள்ள தோல்வி, வெட்கப்பட்டோ, துக்கப்பட்டோ, ஏங்கி நிற்கவேண்டிய 'மகத்தான'தோர் தோல்வி அல்ல. புன்சிரிப்பும், பெருமிதமுங் கொண்டு ஏற்று நிற்கக்கூடிய அப்பழுக்கற்ற தோல்வியே யாகும். 'மகத்தான' காங்கிரஸ்! அதை எதிர்த்து ஒற்றை ஆள்! கொட்டக் கொட்டக் குறையாப் பணபலம், படைபலம், பிரச்சாரபலம், 'ராஷ்டிரபதியின்' பவனி, மந்திரிமார்களின் பார்வை, அதிகாரத்தின் சலுகை, ஆளவந்தார்களின் அணைப்பு இவையனைத்தையுங் கொண்டு நின்ற காங்கிரசை, சமபலங் கொண்ட மற்றோர் கட்சியா எதிர்த்து நின்றது? இல்லை! ஒரு சுயேச்சை, கட்சி ஆதரவு அற்றவர்! வேழத்தின் முன் வெள்ளாடு நிற்பது போன்ற போட்டி! வேழம் வெற்றி பெறுவதில் ஆச்சரியமில்லை!

புண்ணில் பூசியுள்ள வெற்றிப் புனுகு வாசனையை வீசுகிறது. என்றாலும், கபட நெஞ்சினோரும், கள்ளச் சிந்தையரும், கொள்ளை இலாபக்காரரும், கொடுஞ்செயல் புரிவோரும், பதவிவேட்டை ஆடுவோரும், பங்கு பெற முயலுவோரும், அடித்துக் கெடுப்போரும், ஆணவக்காரரும் புண்ணில் மொய்க்கும் ஈக்களெனக் கொத்திக் கிளறி, ஊழல் உடலில் புரையோடும் அளவுக்குச் செய்துவருகிறார்கள் என்பது நாட்டு மக்களின் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்திருக்கிறது. ஊழற் புரையோட்டத்தால் காங்கிரசின் பலம் சரிந்து காணப்படுகிறது. இது இந்தத் தேர்தல் மூலம் புலனாக்கப்பட்டுள்ளது. 'சர்வ வல்லமை' படைத்த காங்கிரசுக்குக் கிடைத்த ஓட்டுகளே 297; பக்கபலமின்றி எதிர்த்து நின்ற ஒருவருக்குக் கிடைத்தவை 289. இடையிலே வேறுபாடு

(12-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் பெருக்கம்

உலக மன்றத்தின் முன் நிற்கும் பிரச்னைகள் பலவற்றிலே, மக்கள் பெருக்கம் பற்றியதும் ஒன்றாகும். இது, இன்றைய நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததொரு பிரச்னையாக வளர்ந்துவிட்டது.

மனிதனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை உண்டாக்கித் தரும் வகையோ, வழியோ காணமுடியாமல் ஒவ்வொரு நாடும் அல்லலுற்று உழல்கின்றன. இவ்விதப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கென்று ஏற்பட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மன்றத்தினாலும் ஏதும் செய்ய இயலவில்லை.

மற்றெல்லா நாடுகளைக் காட்டிலும் வெப்பம் மிகுந்த கிழக்கு நாடுகளில் மக்களின் எண்ணிக்கை மிகவாக வளர்ந்துள்ளது. அதுவும் இந்தியத் துணைக்கண்டத்தில் அது வரையறையின்றிப் பெருகிக் காணப்படுகிறது.

பாக்கிஸ்தான், இந்தியா இரண்டும் சேர்ந்த இந்தியத் துணைக் கண்டத்தின் மக்கள் எண்ணிக்கை நாற்பது அல்லது நாற்பத்திரண்டு கோடிக்கு மேல் இருக்கும் என்று கணக்கிடுகிறார்கள். திட்டவட்டமாக எவ்வளவு என்று அறிந்துகொள்ள இயலவில்லை. அடுத்துவரும் எண்ணிக்கை எடுப்பின் (சென்ஸ்) போதுதான் சரிவர அறியக் கூடும்.

வளங்கொழிக்கும், பழம் பெருமை படைத்த இந்தியத்துணைக் கண்டம், தன்னிடம் வளர்ந்து தவழ்ந்து கிடக்கும் மக்களைக் காப்பாற்றுவதற்கு வழியற்றுக் கலங்கி நிற்கிறது. இன்றியமையாத தேவைகளுள் ஒன்றான உறையுள் அற்று எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் ஊர் சுற்றிகளாக, மரத்தடியையும், இடிந்துவிழுந்து கிடக்கும் குட்டிச் சுவரையும், பாழ் மண்டபங்களையும் தேடியலையும் இடந்தேடிகளாக இருந்துவருகின்றனர். தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குக் கூட உதவி செய்ய மறுக்கும் வெறும் கந்தலாடைகளை அணிந்து வீதிவலம் வருவோரும் கோடிக்கணக்கில் இருக்கின்றனர். இந்தத் தேவைகளும் அற்ற நிலையிலுங்கூட மனிதன் உயிர்வாழ முடியும். ஆனால் மற்றொரு தேவையிருக்கிறதே, முக்கியமான தேவை—முதன்மையான தேவை—உணவு. அது கிடைக்காமல் அல்லற்படும் எண்ணற்றோரையும் இந்நாடு கொண்டிருக்கிறது. பசிக்கொடுமையால் இறந்துபடுவோரின் எண்ணிக்கையும், நாள்தோறும் வளர்ந்து கொண்டே போகிறது.

விலங்கு, பறவை இனங்களிடத்தே கூட ஏற்படாத உயிரின் இன்றியமையாத தேவை பற்றிய பிரச்னைகள், மனித சமுதாயத்திடத்தே இருக்கக் காண்கிறோம். ஏன் இந்த நிலை என்று கேட்டால், போதுமான அளவுக்குமேல் மக்கள் தொகை பெருகிவிட்டது, ஆகவே அதைக் குறைக்க வழி தேடுவதே, பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கான சிறந்த முறை என்கின்றனர்.

இறப்பவரின் எண்ணிக்கையை விடப் பிறப்பவர்களின்எண்ணிக்கை மேலோங்கி வளர்ந்து வருகிறபடியால், 'கர்ப்பத் தடை' முறையைக் கையாளுவதைத் தவிர, வேறு வழியில்லை பிரச்னையைத் தீர்க்க என்று செப்புகின்றனர். கொள்கையைப் பொறுத்த வரையில், கர்ப்பத்தடை முறையை அறிவுடையோர் யாரும் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. அந்த முறையைக் கையாள முயன்றாலும், திட்டம் எளிதில் முடிவதில்லை; அரசாங்கத்தைப் பொறுத்தோ, சட்டங்களைப் பொறுத்தோ, மக்களின் கூட்டுறவைப் பொறுத்தோ, ஓரிருவருடைய முயற்சியைப் பொறுத்தோ நிறைவேறக்கூடியதல்ல; ஒவ்வொரு தனிப்பட்டவரின் அறிவுடம்பட்ட முயற்சியைப் பொறுத்தது. இது நாளடைவில் தான் வளரக் கூடுமேயல்லாது திடும் என்று கைகூடக் கூடியதன்று. நிறைவேற நீண்டகாலம் பிடிக்கும். ஆகையால் அது உடனடிப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்குரிய, மருந்தாகக் கொள்ளக்கூடியதாகாது.

இந்த முடக்க நிலைகளை மனித வர்க்கமே அவ்வப்போது, வெவ்வேறு உருவில் நின்று உண்டாக்கி வந்தன, இன்றும் உண்டாக்கி வருகின்றன.

மனித வர்க்கத்தின் நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு, ஆற்றல், எல்லாம் ஒரு குறிப்பிட்ட ஒருவருக்கோ, சிலருக்கோ, அல்லது ஒரு பகுதியினருக்கோ, ஒரு நாட்டுக்கோ அல்லது ஒன்று சேர்ந்த சில நாடுகளுக்கோ பயன்படும் வகையில் முடக்கப் பட்டுவிட்டன. இந்த முடக்கப்பட்ட நிலைகளெல்லாம் விடுவிக்கப்பட்டால், இல்லை என்றசொல் உண்டியைப்பற்றியோ, உடையைப் பற்றியோ, உறையுளைப்பற்றியோ எழவழியில்லை.

இல்லாமைக்கு இரையாகி நிற்கும் ஏழையர்கள் மிகுந்தநாடு பொதுவுடைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இருக்கும் நாடுகள் இல்லாத நாடுகளின் போக்கைக் கண்டு கிலி கொண்டு, தம்நிலையைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணுகின்றன. எண்ணியதன் முடிவாகப் பொதுவுடைமைக் கொள்கைகளை அழித்துவிட்டால்தான் தாம் வாழ முடியும் என்று கருதுகின்றன. பொதுவுடைமைக் கொள்கைகளை ஒழிக்க முற்பட்டுள்ள வளமுள்ள நாடுகள் பலவும், பொதுவுடைமை தோன்றுவதற்குக் காரணமாக இருக்கும் ஏழ்மையையும், வறுமையையும் தொலைக்க முற்படுமேயானால், உலகின் கொந்தளிப்புக் குறையும். கொந்தளிப்புக் குறைந்தால் முடக்கப்பட்ட சக்திகள் பலவும் விடுபட்டால், தேவைகள் நிறைவேற வழியேற்படும். தேவைகள் நிறைவேற்றப்படும் போது மக்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியம் ஏற்படாது. அப்பொழுதுவேறு பல காரணங்களுக்காகக் கர்ப்பத் தடை முறை வலியுறுத்தப்பட்டாலும், உணவு இல்லை என்ற காரணத்திற்காக மக்கள் பெருக்கத்தைத் தடுக்கும் வழியாக அது கொள்ளப் படமாட்டாது.

---

## முகவரி மாற்றம்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு அஞ்சல் வரைவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு வரைவார்களாக.

இரா. நெடுஞ்செழியன்
C/o "திராவிட நாடு"
95, திருக்கச்சி நம்பித் தெரு,
காஞ்சிபுரம்.

## 8-க்கும் 16க்கும்

11-ம் பக்கத் தொடர்ச்சி

உணர்த்தி நிற்பது 8! இதுதான் காங்கிரசின் சரிவைத் தெளிவாக்கிக் காட்டும் 'மீட்டர்'!

காங்கிரசை எதிர்த்து நின்று தேர்தலில் போட்டி போடும் அளவுக்கு, அமைப்பு முறை முதலியவற்றிலே, சரிசமமாக வளர்ந்து நிற்கும் எதிர்க்கட்சி, இந்தியாவின் பிற மாகாணங்கள் எங்கணும் இல்லை என்றே கூறலாம். சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், எதிர்க் கட்சி உருவாக முடியும் என்றாலும், அத்தகையதொரு நிலை ஏற்படாமலேயே காங்கிரஸ் தனியாட்சி நடத்திவரும் வாய்ப்புள்ள காட்சியாகவே இருந்து வருகிறது. திராவிடர் கழகம், அரசியலில், தேர்தலின் மூலம் நேரடியாகக் கொள்ளக் கூடிய பங்கைக் கொள்ளாமல், அரசியல்—பொருளாதாரம் — சமுதாயம் ஆகியவைபற்றிய அறிவுணர்வை, நாட்டுப் பொதுமக்களிடம் ஏற்படுத்திவரும் சீரிய பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே அது தேர்தலில் எவ்வகைத் தொடர்பும் கொள்ளக் கூடாத — கொள்ள முடியாத இயக்கமாக இப்பொழுது இருந்து வருகிறது. எதிர்க்கும் கட்சி இல்லாதிருந்தும் காங்கிரசின் பலத்திலே பலமான சரிவு காணப்படுகிறது. சரிந்தது போக எஞ்சி நிற்பதாகத் தென்படுவது எட்டே ஓட்டுக்கள்! ஆகவேதான் தோல்வி வெட்கப்பட வேண்டிய தோல்வியும் அல்ல; துக்கப் படவேண்டிய தோல்வியும் அல்ல! காங்கிரஸ் கோட்டையில் ஏற்பட்ட சரிவை — சரிவின் எண்ணிக்கையை நோக்கிப் பெருமிதங் கொள்ளவேண்டிய தோல்வி!

இங்கு மட்டுந்தான் இந்த நிலைமை என்று எண்ணிவிட வேண்டாம். காங்கிரஸ் கோட்டைக்குள்ளும் குமுறல் தோன்றிவிட்டது. குமுறல் பலவழிகளிலே வெடிக்கின்றன. அந்த வெடிப்புகள் மூலமும் கோட்டை சரிந்துதான் காணப்படுகிறது. இன்றைய மந்திரி சபையே 16 ஓட்டுக்களின் மீதுதான் கட்டப்பட்டிருக்கிறது. மந்திரிசபை அமைக்கும் தகுதி பெறும், கட்சித் தலைவர் தேர்தலில் தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா 105 ஓட்டுக்கள் பெற்றார். எதிர்த்து நின்ற டாக்டர் சுப்பராயன் பெற்ற ஓட்டுக்கள் 89. வெற்றியின் அறிகுறியாக இடையிலே நின்றவை 16 ஓட்டுக்களேயாகும். தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜாவுக்குக் கிடைத்ததும் மகத்தான வெற்றியல்ல. எதிர்ப்புச் சக்திகளுக்குக் காவு கொடுத்தவை போக எஞ்சி நின்றவை 16 தான்!

ஏகபோக மிராசு பாத்யதை கொண்டாடி வரும் காங்கிரசுக்கு எதிர்ப்புச் சக்திகள் துண்டு துண்டாக ஆங்காங்கு உருவாகி வருகின்றன என்ற பாடத்தை இந்தத் தேர்தல்கள் நன்கு கற்பித்துள்ளன. நாட்டிற்கு நல்லபணி புரிய, முற்போக்குச் சக்திகள் பலவும் ஒன்று திரண்டு, முன்னேற்றப் பாதையில் முனைந்து நின்று, நாட்டாட்சியை ஏற்றுக்கொள்ளத் துணிவு கொள்ளுமாயின், காங்கிரசின் கரட்டுராஜா வேட்டைப்பலம் நசித்துவிடும் என்பது மட்டும் உறுதி. மமதை மீது நின்று ஆணவஆட்சிபுரிந்த சாம்ராஜ்யங்கள்பலவும்இறுதியில்சரிந்துதான் போயின என்பதை வரலாற்று ஏட்டுச் சுவடிகள் என்றும் பகர்ந்து நிற்கின்றன. சிறிதளவு பிளவு—ஊழல் ஏற்பட்ட சாம்ராஜ்யங்களே சரிந்துவிட்டன என்றால், பழைமைக்குப் பயந்து, வைதிகத்திற்கு வளைந்து, சனாதனத்திற்குச் சாய்ந்து, முதலாளித்துவத்திற்கு முதுகு கொடுத்து, பணக்காரர்களுக்குப் பாராக்குக் கூறி, பதவி வேட்டைக்காரர்களுக்குப் பல்லக்குத் தூக்கி, ஏழைகளின் கண்ணீரைச் சொரிய விட்டுக் கொண்டிருக்கும் காங்கிரஸ் நிலை குலைந்துபோக வழியேற்படாமற் போகாது; ஏற்பட்டே தீரும். இது சரிதங்கூறும் பாடம்.

எனவேதான் வெற்றி இங்கு 8-க்கும், அங்கு 16-க்கும் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறோம். வெற்றி மாபெரும் வெற்றியல்ல; சாமான்யமானது; மிகச் சாதாரணமானது; ஆச்சரியப்பட வேண்டிய அவசியமில்லாதது! இதில் அதிசயிக்க வேண்டியது எதிர்ப்புச் சக்தியின் அளவு—அதனால் காங்கிரசின் உள்ளும் புறமும் ஏற்பட்ட சரிவு! அவ்வளவுதான்!

## நான் கண்ட அழகர்சாமி

7-ம் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சியில் பங்கெடுத்துப் பணியாற்றும் பெருமையைச் சிங்காரவேலருக்கு உண்டாக்கி வந்தவர்களில் அழகர்சாமி அவர்களே முதன்மையானவர் என்பது மறுக்க முடியாததாகும்.

* * *

"குடிஅரசு" பத்திரிகை தொடங்கி ஐந்தாறு ஆண்டுகள் வரையில், சென்னையிலிருந்து கன்னியா குமரி வரையில் கூட்டங்கள் நடைபெறும். அவை அத்தனையிலும் தோழர் அழகர்சாமியின் பெயர் இருக்கும். முதலிரண்டு ஆண்டுகளில், தஞ்சாவூர், செட்டிநாடு, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலேயே, நமது பிரசாரம் மிகப் பலமாக நடைபெற்றது. அக்காலம், எதிர்க்கட்சித் தலைவர் காலஞ்சென்ற எஸ். சீனுவாசய்யங்கார் அவர்கள் காலமாகும். காலஞ்சென்ற கிருஷ்ணசாமிப் பாவலர் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத் தலைவர், "தேசபந்து" என்று ஓர் பத்திரிகை. அது அப்படியே பெரியாரைக் கண்டிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. விருதுநகரில் நமது பிரசாரம் அடிக்கடி நடைபெற்றதாலும், நாடார் சமூகத்தில் பிரபல தலைவர்கள் பலர் நம்மைப் பெரிதும் ஆதரித்ததாலும், விருதுநகரில் நமது இயக்கத்தின் வலுவை அடக்கப்பாவலர் எண்ணினார். பெரியார் இராமசாமி அவர்களைப்போல் கொடும்பாவிகட்டி, நகரில் அதை இழுத்துப்,பின்னர் தீயிலிட்டார்கள். இச்செய்தி காங்கிரஸ் ஏடுகளில் பெரியதாக வெளிவந்தது. உடனே விருதுநகருக்குத் தோழர் அழகர்சாமி வந்தார். தஞ்சாவூரிலேயே விருதுநகர்க் கூட்டத்துக்கு நோட்டீஸ் அடித்துக்கொண்டுபுறப்பட்டோம். விருதுநகரில் தைரியமுள்ள இளைஞர்கள் வாயிலாக அப்பிரசுரம்வெளியிடப்பட்டது. அன்று மாலை விருதுநகரில் ஒரு பெரிய கூட்டம் நடைபெற்றது. தோழர் அழகர்சாமி வீரவுரை நிகழ்த்தினார். அந்தக்கூட்டமே பின்பு விருதுநகருக்கும் நமக்கும் பிரிக்க முடியாத பிணைப்பை உண்டாக்கிவிட்டது.

(தோழர் அழகர்சாமிபற்றிய பல குறிப்புகள் இன்னும் உள்ளன. தொடர்ந்து எழுதுவேன்.)

# நமது "குருமார்கள்"

(சு. வா. வெங்கடாசலம்)

நமது தேசத்தில் சகோதரத்துவம் சமத்துவம் இவைகள் நிலவாமலிருப்பதற்கும், அடிக்கடி பூசல்கள் உண்டாவதற்கும் மூல காரணமாயிருப்பது, ஒருவன் தன்னை உயர்ந்தவன் என்றும், மற்றவன் தாழ்ந்தவன் என்றும் நினைப்பதேயாகும். இது பெரும்பாலும் மனுதர்ம நூலினை ஆதாரமாகக்கொண்டு வருணாசிரமத்தை அவலம்பிக்கின்ற வைதீகர்களாலேயே ஏற்படுகிறது என்பதில் தடையில்லை. நமது தென்னாட்டைப் பொறுத்தமட்டிலும் பிராமணர்கள் தான் இதற்குக் காரணம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமாயிருந்தாலும் வைதிகர்கள் தான் இக்கொடுமையை அதிகப்படுத்துகிறார்களென்பதில் தடையில்லை. ஆகவே புரோகிதக் கூட்டம் ஆச்சாரியக் கூட்டங்களைத் தொலைத்தாலன்றித் தேசம் ஒற்றுமைப்பட்டு வாழ முடியாது. படித்த பிராமணர்களை அவ்வளவு மோசமாய்ச் சொல்வதற்கில்லை. இவர்கள் தங்களுக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் செலவு செய்து படித்துவிட்டுத் தங்கள்புத்திக் கூர்மைக்குத் தகுந்தபடி ஏதோ உத்தியோகம் சம்பாதித்துக்கொண்டு மேல் ஜாதியென்றும் கீழ் ஜாதியென்றும் பாராமல் எல்லாருக்கும் ஊழியம் செய்துவந்து பென்ஷன் வாங்கும் வரையாவது உயர்ந்தவன் என்ற மமதையை விட்டிருப்பதாக நடிக்கிறார்கள். ஆனால் நமக்கு இழிவைத் தரக் கூடியதாயிருப்பது வைதிகக் கொடுமைதான்.

## குருவென்பவன் யார்?

குருவென்பவனுக்குப் பொருள் என்ன என்று யோசிப்போம். நமக்கு அறிவைப் போதித்து இகத்திற்கும் பரத்திற்கும் நல்லொழுக்கத்தையும் ஆத்மார்த்தத்தையும் அடையும்படி செய்பவரே' குரு ஆவார். முன்காலத்திய சரித்திரங்களைப் பார்த்தாலும் வசிஸ்டர், பிரகஸ்பதி, சுக்கிரர், வியாசர் என்போர்கள் அப்படித்தான் செய்துவந்து குரு ஸ்தானம் பெற்றதாகத் தெரிகிறது. இப்போதும் கிறிஸ்துவ மதாச்சாரியார்களாகிய போப் முதலியவர்களும் மகம்மதிய குருமார்களும் நபிகள் நாயகமும், பைபில், குர்ஆன் முதலிய தம் வேதங்களை எல்லாச் சிஷ்யர்களுக்கும் போதித்து எல்லோரும் படிக்கும்படி செய்து தங்கள் சிஷ்யர்களை நல்வழிப்படுத்தி வருகின்றார்கள். வேறு மதஸ்தர்களும் தாராளமாகப் படிக்கும்படி வசதி செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் இன்னார் தான் படிக்கவேண்டும், இன்னார் படிக்கக்கூடாதென்ற பாகுபாடில்லை.

## நமது குருமார்களோ

வேதத்தைப் படித்தால் நாக்கை அறு, பார்த்தால் கண்ணைக் குத்து, கேட்டால் காதில் ஈயத்தை காய்ச்சி விடு. நினைத்தால் நெஞ்சைப்பிளந்து விடு. தொட்டால் கையை வெட்டு, என்று சட்டம் செய்திருக்கிறார்கள். நாம் இந்தக் குருமார்களை நம்பிக் கடைத்தேறுவதெப்படி? பிராமணக் 'குரு' சாப்பிடுவதை பிராமணரல்லாத சிஷ்யன் பார்த்தால் சாப்பாடு பூராவும் விஷமாய்ப் போகிறதென்கின்றார்கள். ஒரு செம்பு தண்ணீர் கொடுத்தால் கிணற்றுத் தண்ணீர் பூராவும் தீட்டாய்ப் போகிறதென்கிறார்கள். சாப்பிடும்போது பேசினால் காசிக்குப் போய்ப் பாவந் தொலைக்க வேணுமென்கிறார்கள். இவ்வளவு ஆகாசத்திலிருக்கிற குருவுக்கும் அவ்வளவு பாதாளத்திலிருக்கிற சிஷ்யனுக்கும் என்ன விதமான பற்றுதலும் சம்மந்தமும் இருக்க முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். இம்மாதிரி நிலையில் உள்ள குருமார்களால் நமக்கென்ன நன்மை ஏற்படும் என்பதைக் கவனிக்க வேண்டாமா? தொழில் பாகுபாட்டால் பல்வேறு ஜாதியாய்ப் பிரிந்தவர்களுக்கு அநேக உட்பிரிவுகளாகக் குலம், கோத்திரம் அனந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பல்வேறு ஜாதிகளுக்கும், குலங்களுக்கும் தனித்தனியாகக் குலகுருஎன்று ஒவ்வொருவர் ஏற்பட்டு வருஷம் வருஷம் தென்னாப்ரிக்காவில் இந்தியர்களிடம் 'தலைவரி' வசூல்செய்வது போல் தலைக்கட்டுவரி இந்தக் குருமார்கள் வசூல் செய்கிறார்கள். நாம் எதற்காக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதை கவனிக்கிறார்களா? 'நம்ம பாட்டன் பூட்டன் தகப்பன் கொடுத்தார்கள்-அதைப் பின்பற்ற வேண்டுமென்கிறார்களே தவிர, இதில் ஏதாவது பாத்தியமோ அர்த்தமோ உண்டா?

## குல குரு

சாதாரணமாகப் பாமர மக்களை ஏமாற்றும் கூட்டத்தில் குரு பீடங்கள்தான் தலைமையாயிருக்கிறது. எப்படியென்றால் புரோகிதனாவது உள்ளூரிலிருந்துகொண்டு பஞ்சாங்கம் சொல்லி,மாவிலை,தர்ப்பைகொண்டு வந்து கொடுத்து ஏதோ குருட்டு மந்திரங்களைச் சொல்லிப் பணம் வாங்குகிறான். கோவில் அர்ச்சகனோ சுவாமி முன்னால் நின்றுகொண்டு மணி அடித்துக்கொண்டு ஏதோ தவளை போல் கத்தி மந்திரம் சொல்லி கூலி வாங்குகிறான். ஒரு விதத்தில் இவர்கள் நமது வேலைக்காரனென்றாவது சொல்லிவிடலாம். ஆனால் குல குருமார்களையென்றால் முழு மோசக்காரர்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. முதலாவது இக்கூட்டத்தில் படித்தவர்கள் ஒருவர் இருவர்தான். மற்றவர்கள் தற்குறிகள். சாப்பாட்டுராமன்கள். சாப்பிடுவதைத் தவிர வேறு எந்த விஷயமும் தெரியாதவர்கள். அதாவது இவர்களுக்குப்பணம்வசூல்செய்கிற வேலையைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. எந்தச் சிஷ்யனையாவது உங்கள் சாமியார் எப்படி யென்றால் 5, 6 வண்டிமாடு 10, 15 ஆட்கள் என்பதுதான் குருவின் மகத்துவம். தவிர, குரு பரம்பரையிலும் சுத்தமாய்ப் படிப்புவராத களிமண் மூளையுடையவர்களைத்தான் அநேகமாய்க் குருவாக்கப் படுகிறது.

## படிப்பு வேண்டாம்; ஆள் நடிப்பாய் இருந்தால் போதும்.

ஏனென்றால் இவருக்கு வேறு வேலையில்லை. பணம் கணக்கு விடாமல் அதாவது போன வருஷம் பங்குனியில் கல்யாணமானவனிடம் நடப்பு வருஷம் வைகாசி மாதம் காணிக்கை வாங்கும்போது இரண்டு வருஷக் கணக்குப்போட்டு [illegible] வேண்டியவர்களாவர் [illegible]

2 மாதம் தானே ஆச்சு என்றால் மாதம் இரண்டானாலும் வருடம் இரண்டாவது ஆய்விட்டதென்று கலகம் செய்துவாங்குவார்கள். இதற்குப் படிப்புவேண்டுவதில்லை. ஆள் மட்டும் தடிப்பாயிருந்தால் போதும். இவர்களுக்கும் நாம் வருடம் தவறாமல் தலைக்கட்டுவரிகொடுத்துச், சாமியார் கோபித்தால் குடி நசித்துப் போகும் என்று நினைத்து ஒழிக்காமல் கொடுத்து அவர்களது காலைக் கழுவின தண்ணீரைக் குடித்து மீதி உள்ளதை தலையில் தடவிக் கொள்ளுகிறோம். இதற்கு ஆதாரம் என்னவென்றுகேட்டால் இராமனுக்கு வசிஷ்டர், இந்திரனுக்குப் பிரகஸ்பதி இருந்ததையும், குருவை மதிக்காததால் தேவேந்திரனுக்குப் பிரம்மஹத்தி வந்ததென்றும் புராணங்களை விரித்துக் காட்டுகிறார்கள். நாமோ அந்தக் குருவின் யோக்கியதையும், இந்தக்குருவின் யோக்கியதையும் ஒன்று தானாகும்! நமக்கும் அப்படிக் கெடுதிவந்து விடுமாக்கும் என்று பயந்து அந்தப் புராணத்திற்கும் இந்தக் குருபீடங்களுக்கும் சந்ததியாக மீளாது அடிமையாகிக் கொண்டு வருகிறோம்.

### பெண் வேட்டை

சில குருமார்களுக்கு மனித வேட்டைகூட உண்டு. இதை எழுதுவது மிக வெட்கக்கேடான காரியம். ஆனால் மூடவழக்கங்களை யொழிக்க வேண்டிய நிமித்தம் எழுதாமலிருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. குருமார்களின் சிஷ்யர்களில் பல பாலிய விதவைகள் உண்டு. அவர்களுக்குச் சில மைனர் வார்சுகளோ அல்லது வார்சுகள் இல்லாமலோ பலபேர்களிருக்கிறார்கள். குல குருக்களாகிய தடிச்சாமியார்கள் வந்து விட்டால் இவ்வூரை விட்டுப் பல ஆண்டுகள் போவதில்லை. இந்த விதவையின் தோட்டம், பூமிகளில் விளைகிற சகல வரும்படிகளும் சுவாமி பூஜைக்கும் சன்னிதானத்தின் செலவுகளுக்குமேயாகும். சுருங்கக் கூறுமிடத்து உடல் பொருள் ஆவி மூன்றும் குருவுக்கே சொந்தமாகி விடுமாம். மற்றவர்களோவென்றால் அம்மாளுடைய தெய்வ பக்தியையும் தெய்வ சிந்தனையையும் குருபக்தியையும் புகழ்கிறார்களேயொழிய அதிலுள்ள படிற்றொழுக்கங்களை ஆராய்வதில்லை. சில சமயங்களில் சாமிகள் கூடவே அம்மையாரும் போய்விட்டுச் சில மாதங்கட்குப்பின் வருவதுமுண்டாம். அப்போதும் அம்மையாரின் மேலான குணத்தையே அதாவது குரு பக்தியையே போற்றுவதுண்டாம்.

இம்மாதிரியான மூட வழக்கங்கள் நமது தேசத்தில் இருக்கும்வரை நமக்கு விடுதலையேது? கன்னிமேயோ அவர்களைக் குறைகூற உரிமையேது! இதுதானா குரு பக்தி? கொடுமை! கொடுமை!!

நமது நாட்டில் சங்கராச்சாரியார் என்றவர்களைத்தான் நாம்இப்போது ஜெகத்குரு அல்லது லோககுருவென்கிறோம். லோககுருவென்றால் சர்வ கண்டங்களிலுள்ள சர்வ மதஸ்தர்களுக்கும் குருவாயிருக்க வேண்டும். ஆனால் இப்போது அப்படியில்லை, பலகண்டங்களில் ஒன்றாயுள்ள ஆசியாக்கண்டத்தில், பலமதஸ்தர்களில் ஒன்றாகிய இந்துக்களில், பல ஜாதிகளில் ஒன்றாகிய பிராமண ஜாதியில் பல உட்பிரிவுகளிலுள்ள ஸ்மார்த்தப் பிராமணர்களுக்குத்தான் குருவாயிருக்கிறார். பெயருக்கும் நிலைமைக்கும் பார்த்தால், சமுத்திரத்தில் ஒரு துளியை ஒப்பிடலாம். இப்படிச்சுமார்இருநூறுகோடிஜனத்தொகையுள்ள உலகத்தில் சில ஆயிரக்கணக்குள்ள ஸ்மார்த்த பிராமணரின் குருவுக்கு ஜெகத்குரு என்று எப்படிப் பெயர் வந்ததென்பதை யோசிக்கும்போது முருகக் கடவுள் ஒளவைப் பிராட்டியிடம் பெரிது கேட்கும்போது, பிராட்டி பெரிது புவனம் பெரிது என்று ஆரம்பித்து உமையவள் இறைவருள்ளத் தடக்கம், இறைவர் தொண்டருள்ளடக்கம், ஆகவே தொண்டர்தம்பெருமை பெரிது என்று ஒரு நீண்ட கதை சொல்லியபடி, இந்த நாட்டில் அரசியல் சமூகவியல் முதலிய எல்லாஇயல்களுக்கும் ஸ்மார்த்தப் பிராமணர்களேமுன்னணியிலிருப்பதால் அவர்களுக்குள் உலகம் அடங்குகிறதென்று எண்ணிய அவர்களுக்குக் குருவாகிய சங்கராச்சாரியார் லோககுருவென்று தீர்மானித்திருக்கலாம்.

### என்ன மடமை

அல்லது அவருக்குத் தினப்படி நூற்றுக்கணக்கான ரூபாய்கள் வேண்டியிருக்கிறது. இதைச் சிஷ்யர்களாகியசிறுதொகையினர்கொடுத்து வரமுடியாமல் அவர்களின் படிப்பு, உத்தியோகம் பதவி இவைகளின் செல்வாக்கிலிருந்து பலசுயநலங்களை எதிர்பார்த்து நிற்கும் பணக்காரர்களையும், மடாதிபதிகளையும், ஜெமீன்தார்களையும்,சிற்றரசர்களையும்ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காக ஏற்பட்ட சூழ்ச்சியாயிருக்கலாம். இன்றைக்கும் நாம் தினப்படி பார்த்துவருகிறதென்ன? மகாசந்நிதானம்வருவதாக உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள் பிரபுக்களிடம் போகவேண்டியது தான் பாக்கி. ரூபாய்கள் கேட்டுப் பெற்றுவிடுகின்றனர். சுவாமிகளை மேளவாத்யம், ஆனை,குதிரை, சகிதம் அழைத்தாச்சுது. சரி சுவாமிக்கு பூஜாகாலம் போஜனகாலமாச்சுது. நீங்கள்போய்ச் சாயங்காலம் வரலாமென்று பிரபுக்களைக் கல்த்தாக் கொடுத்தாய்விட்டது. இவ்வளவுக்குத்தான் நமக்கு லோககுரு சொந்தம். என்ன மடமை!

### ஒரு சம்பவம்

நானும் சில நண்பர்களும் திருக்குற்றாலம் அருவி ஸ்நானத்திற்குப் போயிருந்தபோது பாபநாசம் போய் ஸ்நானம் செய்து வரலாமென்று போயிருந்தோம். அப்போது ஸ்ரீ சங்கராச்சாரியார் அவ்விடம் விஜயம் செய்திருந்தார். சுமார் 3-மாதம் போல் அங்கேயே இருந்தார். அவர் இருந்த இடம் கோவிலுக்குத் தென்புறம் உள்ள மண்டபம். வடபுறம் மண்டபங்களில் வண்டி, யானை, குதிரை, மாடு, இவைகள். கோவில் முன்மண்டபங்களில் வெகுதூரத்திலிருந்து பிள்ளை குட்டிகள் சகிதம் வந்திருந்த சிஷ்யர்களாகிய பிராமணர்கள். கோவில் மண்டபங்களில் தான் பகலிலும், இரவிலும் படுக்கை. அங்கு குழந்தைகள் மலபாதை ஜலபாதை, பெரியவர்கள் வெற்றிலை பாக்குஎச்சில்,பொடிபோட்டுச்சிந்திய எச்சில், இவைகள் இல்லாத இடமில்லை. சுவாமி கோவிலுக்குச் சுமார் 20 அடிக்குள் குளிக்கும் துறை. இதன்மத்தியில் தென்வடலாக ஒரு பாதை. இந்த இடத்திலும் கோவிலுக்குச்சுற்றுப்பக்கங்களிலும் பெரியவர்கள் மலபாதை, ஜலபாதைசெய்து கால்வைப்பதற்கிடமில்லாமல்செய்து விட்டார்கள். நாங்கள் பாபநாசம் போய்ப் பாவம் சம்பாதிக்காமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அதைவிட்டு 2-மைல் தெற்கேமேலேயுள்ள கல்யாணத் தீர்த்தத்திற்குப் போய் ஸ்நானம் செய்துவிட்டு உடனே குற்றாலத்துக்குப் போய்விட்டோம். இதைப்பற்றி 'குடி அரசில்'கூட மகாசன்னிதானத்துக்கு

திருக்கக்கூசுகோவிலுக்கு உட்புறமே கட்டியிருப்பதாக ஒரு நிருபர் எழுதியிருந்தது வாசகருக்கு ஞாபகமிருக்கலாம்.

## இதுதானு நல்லவழி காட்டுகிறது

ஒரு பையனுக்கு ஹரிஓம் நன்ருக என்று நெடுங்கணக்கு அரிச்சுவடி சொல்லிக்கொடுத்தவரை ஆயுள் உள்ளளவும் வித்யாகுரு வென்று மதித்து நடந்துவருகிருேம். நமக்கு பிறவி நோயைத்தீர்த்து நல்வழிக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்கிற ஞானகுரு எப்படியிருக்கவேண்டும்? ஒருசமயம் சங்கராச் சாரியாரவர்களுக்கு கடவுள் இல்லையென்றே அல்லது கடவுளைவிடத் தான் மேம்பட்டவரென்றே எண்ண மிருக்கலாம். ஆனல், கோவிலில்தான் கடவுள் இருக்கிருரென்று நினைத்துக் கொண்டிருக்கிற தாழ்ந்த நிலையிலுள்ளவர்களை மேலேகொண்டு வருபவர்கள் தாங்கள் முதலாவது தெய்வ பக்தி, ஆசாரபக்தி, குருபக்தி, இருப்பதாகக் காட்டவேண்டாமா? மேலே கண்ட இவர்கள் நடத்தையால் எவனுவது கோவிலென்றும், கடவுளென்றும், எண்ண இடமிருக்கிறதா? இப்படிப்பட்ட ஒழுங்கீனத்தை யாராவது கண்டித்தால் நாஸ்திகன், பிராமணத்துவேஷி, குருத்துரோகியென்றும் சொன்னல் யாராவது ஒப்புக்கொள்ளுவார்களா? மற்றொரு விஷயம் சங்கராச்சாரியார் அவர்களுடன் வந்திருந்த பல பிராமணரல்லாத ஆட்கள் பசியுடன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து "உங்களுக்குச் சாப்பாடு சுவாமிகள் அடுகையிலா" என்று கேட்டோம். அவர்கள் சொன்னதாவது :—

## இந்தக் கொடுமையை யாருடன் சொல்வது?

தங்களுக்கு அரிசி பருப்புக் கொடுத்துவிடுவதாயும், அதைத்தங்களுக்கு ஒழிந்த வேளையில் சமைத்துச் சாப்பிடுவதாயும் இந்தச் சாமியின் அடுகைச் சாப்பாடு தாங்கள் பார்த்ததேயில்லை யென்றும் பிராமணர்களுக்குப் போட்ட மிச்சம் இருந்தால் அதைக் குதிரை, யானை மாடுகளுக்கு வைப்பதே தவிர, பிராமணரல்லாதாருக்குக் கொடுக்கிறதில்லை யென்றும், அப்படிக் கொடுப்பது பாவமென்று சொல்கிருர்களென்றும் சொன்னர்கள். இதைக் கேட்ட மாத்திரத்தில் எங்களுக்கு எப்படி வயிறு பற்றி எரிந்தது என்பது இதில் எழுதக்கூடியதல்ல. இக்கொடுமையை யாருடன் சொல்லுகிறது? 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்று சொல்லப்படும் முதுமொழிக்கு விரோதமாக வாரிக் கொடுத்த பிரபுக்களிடமா? அல்லது கொஞ்சமும் சுயமதிப்பில்லாதவர்களும் நல்வழியில் செலவிடத் தெரியாதவர்களுமாகியவர்களுக்கு ஏராளமாகத் திரவியத்தைக் கொடுத்த கடவுளிடமா சொல்வது!

## ஆடம்பரம் எதற்கு?

மகாராஜாக்களுக்கும் சக்ரவர்த்திகளுக்கும்தான் ரத, கஜ, துரக, பதாதிகள் எனப்பட்ட சதுர்வித படைகள் இருப்பதாகப் பார்த்திருக்கிருேம். அது அவர்களுக்கு அவசியமுமாகும். முற்றுந்துறந்த சன்யாசிகளுக்கு இவைகள் எதற்காக? மகாராஜாவாக எல்லாப் போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருந்த ஜனகர் விஸ்வாமித்திரர்கூடச் சன்னியாசம் வாங்கும்போது யாவுந் துறந்திருக்க, சன்யாசி ஆச்சிரமம் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ராஜபோகங்கள் எதற்காக? ஒரு சில இந்து மதஸ்தர்களைப் பயப்படுத்த வருஷம் லக்ஷம் ரூபாய் செலவில் படைகள் வேணுமென்ருல், எத்தனையோ ஜனங்களைப் பயப்படுத்திக் கொண்டு எவ்வளவோ வல்லரசுகளை எதிர்த்து நின்ற பிரிட்டிஷார் வருஷம் அறுபது கோடி ராணுவச் செலவு செய்தது அதிகமென்று சொல்வதற்கில்லையே!

## நமக்குச் சுயமரியாதை வேண்டாமா?

என்று யாராவது கேட்டால், வேண்டும் என்றுதான் சொல்வோம். அதற்கு நாம் முதலாவது புரோகித வைதிகக் கொடுமையை ஒழிக்க வேண்டும். நம்முடைய ஜோலிக்கு இன்னெருவரைத் தேடக்கூடாது. இங்கிருந்து காசிக்குப் போய் திதி கொடுத்தும் நூறு பேருக்குப் பூரிதானம் கொடுத்தும், கயாவில் விஷ்ணு பாதத்தில் பிண்டம் போட்டும் பிதுர்க்கள் மோக்ஷமடைய வில்லையென்று நினைத்துக் கயாவாளிகள் என்ற இருகூட்டம் பஞ்சாப் உருமாலைக் கட்டிக்கொண்டு கெய்சர் சக்ரவர்த்திபோல் மீசையும் தாடியும் வைத்துக்கொண்டு நெற்றியில் ஒரு ரூபாய் அகலம் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு குடிகாரனின் கண்ணைப்போல் சிவந்த பார்வையுடையவர்கள், தங்களுடைய நாசி வீடு கூட ஒரு சிறிய அரண்மனை போல் கட்டிவைத்துச் சுகித்து வருகிறவர்கள், பல்லக்கில் வந்து வடவால விருக்ஷத்தில் பிண்டம் போட்டு அவர்கள் பிடி குடித்துக்கொண்டிருக்கும் வாயால் பிதுர்க்கள் மோட்சம் அடைந்தார்கள் என்று சொன்னலல்லாமல் மோட்சமில்லை யென்று நினைத்து, வக்கீலிடம் பீசு பேசுவது போல 50 ரூபாய்க்குக் குறையாமல் நூற்றுக்கணக்காகக் கொட்டிக் காலைப்பிடிக்கிற மூடவழக்கம் ஒழிய வேண்டும். நம்ம பிதுர்க்களுக்குப் புரோகிதர் வயிறு மூலமாய் தபாலில் அனுப்புகிற திதி, கோதானம், பூதானம் அழியவேண்டும், கோவிலிலிருக்கும் கல் சாமிக்கும், நமக்கும் மத்தியில் அத்து ஏற்படுத்தி, நீ இங்கே வரப்படாது, பிரசாதம் கையில் வாங்கப்படாது, விழுந்து கும்பிடப்படாது என்று இழிவுபடுத்தி, இதுதான் சாமி, இவர்தான் பூசை செய்பவர், இவர்தான் மொழி பெயர்ப்பவர், அவர் செய்கிற அர்ச்சனைதான் சாமிக்குப் பிரீதி, நம் பொங்கல் பழம் தான் சாமிக்கு ஆதாரம் என்று நினைத்துக் கொண்டிருக்கிற அறியாமை நீங்கவேண்டும். இந்தத் தீர்த்தத்தில் குளித்தால் பிரமலோகம் என்று சொல்லிக்கொண்டு நாற்றத்தண்ணீரில் விழுந்து நோய் சம்பாதிக்கிற மூடத்தன்மைபோகவேண்டும். வயிரமாலைக்கும் முத்துமாலைக்கும் ஆனை குதிரை மாடுகளுக்கும் ஒரு நேரமெல்லாம் காதடைத்துப் போகும் படியாக சேகண்டி, துத்தாரி வாத்தியங்களுக்குப் பயந்து ரூபாய் பவுன் அர்ச்சனை செய்கிற அடிமைப் புத்தி தொலைய வேண்டும். சாமியார் பெயர் வெகு நீளமாயிருப்பதாலேயே எல்லாம் தெரிந்த பெரிய சாமியார் என்று நினைக்கிற அர்த்தமற்ற எண்ணம் தொலையவேண்டும்.

## உண்மையான குரு யார்?

நமக்கு உண்மையான குருமார்கள் எப்படியிருக்கவேண்டும் எல்லாரிடமும் பட்சமாயும், அன்பாயும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவராயும் காமக் குரோதங்களிலிருந்து விடுபட்டவராயும், சத்யசீலராயும் ஆடம்பரமற்றவராயும், ஜீவன்களிடத்தில் அன்பு உடையவ

(4-ம் பக்கம் பார்க்க)

# பழையன கழிதல்!

[பாரதி—சுப்பையா]

"மாநிலத்திலே மக்களாய்ப் பிறந்தோர் யாவரும் சரி நிகர் சமானம். யாரும் யாருக்கும் அடிமையில்லை; இருக்கமுடியாது; இருக்கவும் கூடாது என்றகொள்கை மேலோங்கி வரும் இந்த நாகரிக நாட்களிலே இத்தகைய அநீதி இடம் பெறலாமா?"

"ஐயோ, அந்தக் காட்சியை நினைத்தால் கூட நெஞ்சு பொறுக்குதில்லையே! பார்த்தால் பரிதாபமாயிருக்கிறதே! இதைத் தடுப்பாரில்லையா?"

"கீழே கொதிக்கின்ற தார், மேலே காய்கின்ற ஞாயிறு, வண்டியின் மேல் ஒரு மனிதன். அவனை இழுத்துக் கொண்டு ஓடுகிறான் மற்றொரு மனிதன். இந்தக் கண்றாவிக் காட்சியைச் சகிக்கமுடிய வில்லையே"

என்று பல நண்பர்கள், அறிஞர்கள் இன்று ரிக்ஷா வண்டி மீது ஆத்திரப்படுவதை நாள்தோறும் பத்திரிகையில் காண்கிறோம். மத்திய அரசாங்க மந்திரி, திருமதி ராஜகுமாரி அமிர்த கௌரி அம்மையாரும் ரிக்ஷாவை ஒழிக்கவேண்டுமென்று மாகாண சர்க்கார்களுக்குச் சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது. தன்மான இயக்கத்தாராகிய நாம் இம்முயற்சியைத் தயங்காமல் வரவேற்கிறோம். ரிக்ஷா ஒழிய வேண்டும்; ஒழித்தேயாக வேண்டும் என்று, கிளர்ச்சியாளர்களோடு நாமும் சேர்ந்து கூறுகிறோம்.

ஆனால், ஒரு ஐயம் தோன்றுகிறது. ரிக்ஷாவை ஒழிக்க வேண்டுமென்பவர்கள் மனிதனின் "கடினவேலை"யைக் கண்டு இரங்குகின்றனரா? அன்றி ரிக்ஷா இழுக்கும் 'தொழிலைக்' கண்டிக்கின்றனரா? அல்லது மனிதன் மீது மனிதன் சவாரி செய்யும் மானங்கெட்ட முறையை வெறுக்கின்றனரா? என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஏனெனில் ரிக்ஷாவை ஒழிக்க விரும்பும் அவர்கள் ரிக்ஷா வண்டியைப் போலவே மனிதன் மீது மனிதன் சவாரி செய்யப் பயன்படும் மற்ற வண்டிகளைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை.

இந்து மத அற நிலையங்களிலே மடாதிபதிகள் தங்கப் பல்லக்குகளிலே பயணம் செய்கின்றனர். அவற்றைச் சுமந்து செல்வோர் மனிதர்கள் தான்.

ஜமீன்தார், சமஸ்தான மன்னர் ஆகியவர்களின், அரண்மனைகளிலே சிவிகைகள் உள்ளன. பிறந்த நாள் விழாபோன்ற விசேட தினங்களில் ஜமீன்தார்கள் அவற்றில் ஏறிப் பவனி வருகின்றனர். பாரம் தாங்குவோர் மனிதர்களே.

கோவில்களிலே கடவுள் உருவங்களைத் தூக்கிச்செல்லக் கனக தண்டிகள், வாகனங்கள் உள்ளன. அவற்றின் மீது பூசாரிகள் ஏறிக்கொள்ள, அவற்றைச் சுமந்து ஊர்வலம் வருவோர் மனிதர்களே.

மனிதனை மனிதன் இழுப்பதும், மனிதன் மீது மனிதன் சவாரி செய்வதும் தவறு என்றால் இவையும் கண்டிக்கப்பட, ஒழிக்கப்படவேண்டியவை அல்லவா?

ஆதி நாட்களிலே தோன்றிய மனிதன் வேலைப் பளுவைக் குறைக்க விரும்பிப் பலவழிகளில் முயன்றான். முதலில் சக்கரமில்லாத வண்டி செய்து மனிதர்களைக் கொண்டு சுமக்கச் செய்தான். பின்பு சக்கரமுள்ள வண்டிகள் செய்து மிருகங்களைக் கொண்டு இழுக்கச்செய்தான். இங்ஙனம் படிப்படியாக முன்னேறிய தன் பயனாக மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பதில் இன்று மக்களைச் சுமந்து செல்ல இயந்திர வண்டிகள் செய்யப்பட்டு விட்டன. ஆயினும் பழையபல்லக்குகள் ஒழிந்தபாடில்லை. பஞ்சாங்கங்கள் ஒழியவில்லையே, பல்லக்குகள் எப்படி ஒழியும்? அத்துடன் இன்றைய நாகரிகத்தின் நச்சுப் பயனாகிய ரிக்ஷாவும் சேர்ந்து கொண்டது.

அநாகரீக காலத்திலே ஆக்கப்பட்ட கருவி பல்லக்கு. நாகரிக நாட்களிலே செய்யப்பட்டுள்ள வண்டி ரிக்ஷா. ஆலயங்களிலும் அரண்மனைகளிலும் மட்டுமேகாணப்படுகின்றது பல்லக்கு. அன்றாடம் ஒவ்வொரு நகரத்தின் மூலை முடுக்குகளிலும் நடமாடுகின்றது ரிக்ஷா.

ஆனால் இரண்டும் மனிதன்மீது மனிதன் ஏறிச் சவாரி செய்யவே பயன்படுகின்றன. ஒன்று ஆதி காலத்து ஆடம்பரத்தின் சின்னம். மற்றது இக்காலத்து அநாகரிகத்தின் முத்திரை. அது அடிமைத்தனத்தின் அறிகுறி. இது வறுமையின் அடையாளம். அது சுமக்கப்படுவது. இது இழுக்கப்படுவது. இரண்டும் மனிதனுக்கு வேதனை அளிப்பன. மனித உள்ளத்தை உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக்குவன. அடிமையும் வறுமையும் ஒழிய வேண்டுமானால் இவையிரண்டும் ஒழிந்தேயாகவேண்டும் என்பதில் ஐயமில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

## மணம் மறுக்கும் பெண்களுக்கு வரி!

திருமணம் செய்து கொள்ளாமல் திருமணத்தை மறுக்கும் பெண்களுக்கு வரி விதிப்பதற்கான மசோதா ஒன்று, அலாஸ்கா நாட்டில், மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ளது. மசோதாவைக் கொண்டு வந்துள்ளவர் வில்லியம் ஈகன் என்பவர். அலாஸ்காவில் மொத்தம் 40000 ஆண்களும், 20000 பெண்களும் இருக்கிறார்கள். மசோதாவைக் கொண்டு வந்தவர், பெண்களைவிட ஆண்கள் இரட்டிப்பு மடங்கு இருக்கும்போது பெண்கள் மணஞ் செய்து கொள்ளாமல் சந்நியாசினிகளாக வாழ முற்படுவது பரிகசிக்கத் தக்கதாகும் என்றும், அந்த நிலையை ஏற்படுத்துகிறவர்களுக்கு வரி விதிக்க வேண்டியது அவசியம் என்றும் வற்புறுத்திக் கூறியுள்ளார். மண வாழ்க்கையை விரும்பாமல் தனிப்பட்ட வாழ்க்கையை நடத்த விரும்பும் பெண்கள் ஆண்டு ஒன்றுக்கு 12 பவுன்கள் 10 ஷில்லிங்குகள் வரியாகச் செலுத்தவேண்டும் என்று மசோதா கூறுகிறது.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.